# யா/காரைநகர் இந்துக்கல்லூரி

## காரைநகர்




# நதி

## உயர்தர மாணவர் ஒன்றியம்

**2016**

யா/ காரைநகர் இந்துக் கல்லூரி

காரைநகர்

# நதி

உயர்தர மாணவர் ஒன்றியம்

2016

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்த்துச்செய்தி | i |
| 2. | தலைவரின் உள்ளத்திலிருந்து | vi |
| 3. | உபதலைவரின் எண்ணங்களில் இருந்து | vi |
| 4. | செயலாளரின் எண்ண அலைகளில் இருந்து | vii |
| 5. | உப செயலாளரின் உள்ளத்திலிருந்து | vii |
| 6. | பொருளாளர் உள்ளத்திலிருந்து | viii |
| 7. | நூலாசிரியர் இதயத்தில் இருந்து எழுந்தவை | viii |
| 8. | மனிதவள முகாமைத்துவம் | 1 |
| 9. | கிரய நடத்தைகள், கிரள அளவு, இலாப பகுப்பாய்வு என்பவற்றினூடாக முகாமைத் தீர்மானம் எடுத்தல் | 11 |
| 10. | அரசியலில் இளைஞர் பங்கேற்பின் முக்கியத்துவம் | 17 |
| 11. | இலங்கை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவை | 19 |
| 12. | சிற்பிகள் | 21 |
| 13. | மீண்டும் பெற முடியாத சொத்து | 22 |
| 14. | அண்ணல் எங்கே | 23 |
| 15. | SRILANKA | 24 |
| 16. | எம் பள்ளி காலங்களில் | 25 |
| 17. | பிரியமான நண்பர்கள் | 27 |
| 18. | இலங்கை மத்திய வங்கி பற்றிய ஓர் கண்ணோட்டம் | 28 |
| 19. | கல்லூரி நாட்கள் | 29 |
| 20. | மனித உடலின் ஆச்சரியம் | 30 |
| 21. | தாயன்பு | 31 |
| 22. | வாழ்வில் முன்னேற வைரவரிகள் | 31 |
| 23. | விடாமுயற்சி வெற்றி தரும் | 32 |
| 24. | கல்லூரி நினைவுகள் | 33 |
| 25. | ஆபத்தானது குளிர்பானம் | 34 |
| 26. | சிந்தனைத்துளிகள் | 35 |
| 27. | மருத்துவ(ன்)ம் | 36 |
| 28. | சில பதிணெண்கணக்கு நூல்கள் | 37 |
| 29. | நினைவில் நிழல்கள் | 38 |

30. வாழ்வாழ்ந்து பார் 39

31. பள்ளிப்பருவம் 40

32. CRICKET 41

33. தமிழ் 42

34. கல்வி 43

35. கல்லூரி வாழ்க்கை 43

36. விஞ்ஞான கருவிகள் 44

37. வெற்றிக்கு வழி 45

38. பள்ளிப்பருவமதில் 46

39. The importance of the study of English 47

40. விடியலை நோக்கி 48

41. ஏக்கம் நிறைந்தது 49

42. பொது அறிவு 50

43. என் வகுப்பறை 51

44. நிலையில்லாத வாழ்க்கை 52

45. விஞ்ஞான ரீதியான சில விளக்கங்கள் 53

46. நீ வருவாய் என 55

47. காரைநகர் இந்துக்கல்லூரியின் 2015ம் ஆண்டு உயர்தர மாணவர் ஒன்றிய அறிக்கை 56

48. பாடசாலைக் கீதம் 57



# தீவக வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ காரைநகர் இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினரால் வெளியிடப்படுகின்ற நதி சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன்.

"இலக்கியம் என்பது ஒரு காலத்தின் கண்ணாடி. ஒரு சமூகத்தின் ஆன்மா" என்று கூறுவர். அதே போல் நதி சஞ்சிகையில் வெளிவருகின்ற ஆசிரியர்களதும் மாணவர்களதும் படைப்புக்கள் காலத்தின் கண்ணாடியாக வரலாற்று ஆவணமாக வருவதையிட்டு அவர்களை வாழ்த்துவதுடன் நதி சஞ்சிகை வெளிவருவதற்கு உழைத்த கல்லூரி அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர், மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

"நதி நீண்டோடட்டும்"


சு. சுந்தரசிவம்

வலயக்கல்விப் பணிப்பாளர்,

தீவகம் வலயக்கல்வி அலுவலகம்,

வேலணை.



# வாழ்த்துச்செய்தி

யா/காரைநகர் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற "நதி" சஞ்சிகைக்கு கோட்டக் கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பாடசாலையில் உள்ள உயர்தர மாணவர்களின் ஆக்கங்களைத்தாங்கி இம் மலர் வெளியிடப்படுவதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றல், ஆக்கச்செயற்பாடுகள் ,புதிய கண்டுபிடிப்புக்கள், மாணவர்களின் கற்பனைத் திறன்கள் பாடசாலை மட்டத்தில் வளர்ப்பதற்கு பாடசாலை ஒரு களம் அமைத்துக்கொடுப்பது மகிழ்ச்சிக்குரியவிடயமாகும். அவ்வகையில் இம் மலர் வெளியிடுவதற்கு வழிகாட்டிய அதிபர், உயர்தர மாணவர்மன்ற தலைவர், ஒன்றிய பொறுப்பாசிரியர் அவர்களையும் பாராட்டுவதுடன் உயர்தர மாணவர்மன்ற தலைவர், செயலாளர், பொருளாளர் நிர்வாக உறுப்பினர்களையும் இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கிய உயர்தர மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மனமகிழ்வு அடைவதுடன் இச்சஞ்சிகை வருடாவருடம் வெளிவர எல்லாம்வல்ல ஈழத்து சிதம்பர சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

திரு.ஆ.குமரேசமூர்த்தி
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
காரைநகர்.



# வாழ்த்துச் செய்தி

2016ம் ஆண்டு எமது கல்லூரியின் க.பொ.த (உ.த) மாணவர் ஒன்றியத்தின் வெளியீடானது நதி எனும் இச் சஞ்சிகை மாணவர்களின் ஆக்கங்களை சுமந்து கொண்டு உங்கள் கைகளிற்கு வருகின்றது. இவ் வேளையில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தொடர்ந்து மாணவர்களின் நல்ல நட்புறவினால் ஒன்றுகூடும் உயர்ந்த பண்பு, சமூகவிழுமியங்களை வளர்த்து உருப்பெறும் உணர்வினையும் தொடர்பினையும் வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்வதற்கும் எண்ணங்களை கருத்தாடல்கள் மூலம் தெரிவிப்பதற்கும் இன்றைய ஒன்றுகூடல் நன்னாளும் இச் சஞ்சிகையும் காலத்தால் அழியாத தொடர்பினை வளர்த்துச் செல்லும். இந்த நல் முயற்சியில் பங்கேற்ற மாணவர்களையும் நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன். இம் மாணவர் ஒன்றியத்தின் இச் செயற்பாடு தொடரவும் வளம்பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

துாம்பினில் புதைத்த கல்லும் துகளின்றி சுடர் கொடாது!

திருமதி.கலாநிதி சிவநேசன்
பதிலதிபர்,
காரைநகர் இந்துக் கல்லூரி.



# பொறுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து


எமது காரைநகர் இந்துக் கல்லூரி 2017ம் ஆண்டு உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் நதி சஞ்சிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகுந்த மன மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களின் சுய படைப்பாற்றல், திறமை, ஆளுமைகளை வெளிப்படுத்த சிறந்த ஒரு களமாகவும் அத்துடன் ஆசிரியர்களின் அனுபவ ரீதியான ஆக்கங்களையும் பகிர்ந்து வழிகாட்ட ஓர் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறான கனதியான ஆக்கங்களை தாங்கிய இவ் நதியானது வற்றாத வளம் பெருக்கும் சஞ்சிகையாக செல்லும் இடமெல்லாம் செழிப்பாக்கும் சஞ்சிகையாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

பேனா என்னும் உளி எடுத்து நதி எனும் சிலை வடித்த சிற்பிகளுக்கும் வழிகாட்டிய அனுபவம் வாய்ந்த சிற்பிகளுக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

திரு.ஞா.கிரிதரன்
ஆசிரியர்,
காரைநகர் இந்துக் கல்லூரி.



# பொறுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து

எமது பாடசாலையின் 2016 2017 ஆம் கல்வியாண்டு உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வெளியிப்படும் "நதி"சஞ்சிரகைக்கு எனது முதற்கண் வாழ்த்துக்களை கூறுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

அன்னை மடியில் தவழ்ந்த பிள்ளை பிஞ்சுப் பாலகனாய் பள்ளி வந்து 13 ஆண்டுகள் கல்வி கற்கிறான்.அந்தப் 13 ஆண்டுகளிலும் உயர்தரத்தில் கல்வி கற்கும் அந்த 2 வருடங்களிலும் அவனது பாடசாலைக் காலத்தின் பொற்காலம் ஆகும்.எல்லோருக்கும் அந்தக் கொடுப்பனவு கிடையாது. இப் பருவத்திலே தான். புதிய சிந்தனைகள், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள், கண்டுபிடிப்புக்கள், மனவெழுச்சி போன்றன தோன்றும். அந்த வகையில் எமது பாடசாலை மாணவர்களும் அதற்கு விதிவிலம்மானவர்கள் அல்ல. இக் காலத்தில் தான் மாணவர்கள் சுய கட்டுப்பாடு, முயற்சி, ஒழுக்கம் என்பவற்றை கடைப்பிடித்து உயர்தர கல்வியை சிறப்பாக மேற்கொண்டால் "ஒளிமயமான எதிர்காலம்" அவர்களுக்காக காத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எமது வாழ்வை அழகான பூந்தோட்டமாக்குவதும்,பயனற்ற பாலைவனமாக்குவதும் இந்த உயர்தரக் கல்வியின் பெறுபேறாகும்.

எனவே என் அன்புக்குரிய மாணவர்கள் அனைவரது வாழ்வும் அழகிய பூந்தோட்டமாக்வும், அங்கு தென்றல் வீச இறைவனை வேண்டி "நதி" பெருக்கெடுத்து ஓடி பசுமையை வளர்க்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன்.

திருமதி விஜயலட்சுமி ரமணன்
ஆசிரியர்
காரை இந்துக் கல்லூரி



# தலைவரின் உள்ளத்திலிருந்து.........

எமது பாடசாலையின் உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் என்ற வகையில் எமது சஞ்சிகையை பற்றி சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன். எமது கல்லூரி அன்னையின் அரவணைப்போடும் உயர்தர மாணவர்களின் முயற்சியாலும் மாணவர்களது சுய ஆற்றல்களையும் அவர்களது ஆக்கங்களையும் வெளிப்படுத்தும் களமாக இந்த 'நதி' சஞ்சிகையானது விளங்குகின்றது.

எமது பாடசாலை மாணவர்களின் இதய ஊற்றிலிருந்து ஊற்றெடுத்து பாயும் இச் சஞ்சிகையானது இன்னும் பல ஆண்டுகளிற்கு மாணவர்களின் வெளிப்பாடாக வெளிவர வேண்டும் என விரும்புகின்றேன்.

இச் சஞ்சிகையானது மாணவ மனப்பெருங் கடலில் சங்கமிக்கும் திறமைக்குச் சான்றாக அமையும் என்பதில் பெருமகிழ்வடைகின்றேன். மேலும் 'நதி' சஞ்சிகை வெளிவர எமக்கு ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களிற்கும் உதவிய பொறுப்பாசிரியர்கட்கும் நெஞ்சம் மறவா நன்றியன்பினை சமர்ப்பிக்கின்றேன்.

ச. பிரதாபசர்மா
2017 கணிதப்பிரிவு
காரைநகர் இந்துக் கல்லூரி



# உப தலைவரின் எண்ணங்களில் இருந்து

எமது கல்லூரியின் உயர் தர மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்படுகின்ற இந்த சஞ்சிகையானது மாணவரிடையே காணப்படுகின்ற அறிவையும் ஆற்றலையும் வெளிக்கொணரவும் மேலும் வளப்படுத்தவும் உதவுகின்ற ஒரு சஞ்சிகையாக திகழ்கின்றது.

இச் சஞ்சிகையானது மேலும் அனைவருக்கும் இனி வரும் காலங்களில் பயன்படும் வகையில் அமைய வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு இதற்கு உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நிசாந்தன்
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி.



## செயலாளரின் எண்ண அலைகளில் இருந்து...

எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் என்ற வகையில் கருத்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒன்றியத்தினால் வெளிவருகின்ற இச் சஞ்சிகையானது மாணவர்களினது அறிவுக் கண்ணை திறப்பதில் பெரிதும் பங்காற்றும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நதி என்னும் சஞ்சிகையானது பல நல்ல கருத்துக்களை தாங்கி வற்றாத நதியாக ஓட வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கிறேன். அத்துடன் இச் சஞ்சிகையினை வடிவமைப்பதில் உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கி.லாவண்யா
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்து கல்லூரி



## உப செயலாளரின் உள்ளத்திலிருந்து.........

எமது கல்லூரி தாயினை முதற்கண் தலை வணங்கி எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் உப செயலாளர் என்ற வகையில் கருத்துக்கள் வழங்குவதை இட்டு மிகவும் பெருமிதம் அடைகிறேன். 2017ம் உயர்தர மாணவ ஒன்றியத்தினால் வெளியிடப்படும் 'நதி' சஞ்சிகையானது எதிர்வரும் சந்ததியினருக்கு 'நதி' ஆக ஊற்றெடுத்து நல்லெண்ணம் நல்ல பண்பு போன்ற பல உயர்ந்த சிந்தனைகள் தோன்றி வாழ்வில் மென்மேலும் உயர வேண்டும் என இறைவன்ன பிரார்த்திக்கின்றேன். இவ் நதி சஞ்சிகையானது அடுத்து வருகின்ற சந்ததியினருடாக மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து மிகவும் பயனுள்ளதாக அமைவதோடு வற்றாத நதியாக தொடர்ந்தும் ஊற்றெடுக்க வேண்டுமென்று அடுத்து வரும் சந்ததியினரை கேட்டுக்கொள்கின்றேன். நதி சஞ்சிகையானது சிறப்பாக ஊற்றெடுப்பதற்கு ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களிற்கும் எமது உயர்தர மாணவ ஒன்றியத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சு. டிலக்சனா
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி




உயர்தர மாணவர்கள் – 2018




உயர்தர மாணவர்கள் – 2017




உயர்தர மாணவர்கள் – 2016



## பொருளாளர் உள்ளத்தில் இருந்து.........

எமது உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளிவருகின்ற நதி என்னும் சஞ்சிகையானது வருடாவருடம் வெளியிடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 2017 கல்வியாண்டு மாணவர்களால் வெளியிடப்படுகின்ற இந் நதி சஞ்சிகையானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுடையதாக அமையும் என்பதில் ஐயமில்லை. நதி சஞ்சிகையானது பல நல்ல கருத்துக்களைத் தாங்கி வற்றாத நதியாக விளங்க வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதோடு நதி சஞ்சிகையினை வெளியிட உதவிகளை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வி. பத்மினி
2017 வர்த்தகம்
காரைநகர் இந்துக்கல்லூரி



## நூலாசிரியர் இதயத்தில் இருந்து எழுந்தவை

காரைநகர் இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர்களின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடே நதி சஞ்சிகை ஆகும். யா/ கலாநிதி ஆ தியாகராயா மத்திய மகா வித்தியாலயம் என்னும் பெயரில் இயங்கி வந்த எம் பாடசாலை மீண்டும் தனது பழைய பெயராகிய காரைநகர் இந்துக்கல்லூரி என்ற பெயரைத் தாங்கிய இவ் வருடத்தில் நதி சஞ்சிகை வெளியிடுவதை இட்டு நாம் பெருமை அடைகிறோம்.

2016ம் ஆண்டு வெளிவரும் இச் சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தி வழங்கிய பெரியோர்களுக்கும் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய கல்லூரி அதிபர், பதிலதிபர், பெறுப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நதி சஞ்சிகைக் குழுவினர் சார்பாக இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.

சமூகத்தில் ஒரு மனிதன் தன்னை அடயாளப் படுத்திக் கொள்வதற்கு கல்லூரி வாழ்க்கையை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அதற்கு மாணவர்கள் கற்றல் செயற்பாட்டிற்கு மேலாக இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் அதற்கான ஒரு களமே நதி சஞ்சிகை ஆகும்.

இன்றைய இந் நதியானது தொடர்து வரும் காலங்களில் தேங்கி விடாது நீண்டோட வேண்டும் என்பதே எனது விருப்பாகும்.

யோ. டர்மிதா
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி

Mrs. Kalanithi Sivanesan
B.Com (Hons), PGDE,
Acting Principal
J/Karainagar Hindu College.



# மனிதவள முகாமைத்துவம்
# Human Resource Management

நிகழ்காலப் பொருளாதாரச் சமூக விருத்திகளோடு விரிவான மனிதத் தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு உலகம் பூராகவும் பாரியளவு எண்ணிக்கையிலான வணிகங்கள் உருவாகியுள்ளன. இவ் வணிகங்களானவை மனிதத் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்வதன் மூலம் அவற்றுக்கு உரித்தான விசேட நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் செயற்படுகின்றன. அதிகளவு எண்ணிக்கையிலான வணிகங்கள் காணப்பட்டாலும் இவ் அனைத்து வணிகங்களும் வெற்றிகரமாகச் செயற்படுவதைக் காணமுடியாது. எனவே வணிகமானது தனது நோக்கத்தை எந்தளவில் அடைந்து கொண்டுள்ளது எனும் அடிப்படையிலேயே அவ் வணிகத்தின் வெற்றி, தோல்வி தங்கியுள்ளது. வணிகம் தான் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நோக்கங்களை அடைந்துகொள்ள வேண்டுமாயின் அவ் வணிகத்திடம் காணப்படும் வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

வரையறையற்ற மனித தேவைகளுக்கேற்ப வளங்கள் போதுமான அளவில் காணப்படாமை வளங்களில் காணப்படும் பொதுவான இயல்பாகும். இந்த வகையில் வணிகத்திடம் காணப்படும் உழைப்பு, மூலப்பொருள், பணம் போன்ற வளங்கள் வரையறைக்குட்பட்டு இருப்பதனால் அவ் வளங்களிலிருந்து உச்ச பயன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை வணிகர்களிடம் இருத்தல் வேண்டும். எனவே வரையறுக்கப்பட்ட மனித வளத்தை முகாமைத்துவம் செய்வது அவசியமானது.

"அமைப்பொன்றின் நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கு ஊழியர் திருப்தியினையும் விருத்தியினையும் வழங்கக்கூடிய முறையில் நிறுவனத்தின் மனிதவள முகாமைத்துவத்தினை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவது தொடர்பான செயற்பாட்டுத் தொகுதி மனிதவள முகாமைத்துவம்" ஆகும். ஏனைய வளங்களுடன் ஒப்பிடும் போது மனித வளமானது உயிரோட்டமுள்ளது, எதிர் விளைவினைக் காட்டக்கூடியது, ஏனைய அனைத்து வளங்களையும் கட்டுப்படுத்தக்கூடியது, பயிற்றுவிக்க முடியுமானது, குழுவாக கருமமாற்றக்கூடியதான பல்வேறுபட்ட சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது.

அமைப்பின் வெற்றிக்காக உச்ச பங்களிப்பினை வழங்குகின்ற, பொருத்தமான திருப்திகரமான ஊழியப்படை சேவையொன்றை உருவாக்கிக்கொள்வது மற்றும் தொடர்ந்து வைத்திருப்பது மனித வள முகாமைத்துவத்தின் பொது நோக்கமாகும்.

மனிதவள முகாமைத்துவத்தின் சிறப்பு நோக்கங்களாக,

- ஊழியர் வினைதிறனை அபிவிருத்தி செய்தல்
- ஊழியர் கிரயத்தினை கட்டுப்படுத்தல்
- ஊழியர் அபிவிருத்தியினை ஏற்படுத்தல்
- ஊழியர் தொடர்பான சட்டரீதியான நிபந்தனைகளை நிறைவு செய்தல்
- ஊழியர் நலன்புரிச்சேவை
- தொழிலுக்கு உரிய நேரத்திற்கு ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல்
- ஊழியர் ஊக்குவிப்பினை உருவாக்கல்
- ஊழியர்களை நிறுவனத்தில் வைத்திருத்தல்

மனிதவள முகாமைத்துவத்தின் வெற்றியின் அடிப்படையிலே உற்பத்தி, நிதி, விநியோகம் போன்ற ஏனைய முகாமைப் பிரிவுகளின் வெற்றிகளும் தங்கியுள்ளன.

**மனிதவள முகாமைத்துவத்தின் கருமங்கள்**

- தொழில் உருவாக்கம் (Job design)
- வேலைப் பகுப்பாய்வு (Job analysis)
- மனிவளத் திட்டமிடல் (Human Resource planning)
- ஆட்சேர்ப்பு (Recruitment)
- தெரிவு (Selection)
- இணைத்துக் கொள்ளுதல் / பதவியில் அமர்த்தல் (Appoinment)
- அறிமுகப்படுத்தல் / தொழில் இசைவாக்கம் (Intuction)
- பயிற்சியும், அபிவிருத்தியும் (Training & Development)
- ஊழியர்கள் அசைவுகள் (Employer movements)
- செயல் திறன் மதிப்பீடு (Performance appraisal)
- கொடுப்பனவு முகாமைத்துவம் (Payment management)
- ஊழியர் நலன்புரிச்சேவை (Employee walfare)
- ஊழியர் தொடர்பு (Labour relations)

**தொழில் உருவாக்கம்**

யாதேனும் குறித்த நேரத்தினை நிறைவேற்றும் பொருட்டு நிறுவன தொழில் அலகொன்று எனும் வகையில் மேற்கொள்ள வேண்டிய கருமங்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றைத் தயாரித்தலை தொழில் உருவாக்கம் எனலாம்.

**தொழில் பகுப்பாய்வு**

வேலையொன்றின் பண்புகள், குறித்த நடத்தைகள் என்பன தொடர்பாகவும் அவ் வேலையை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஊழியர்களிடம் காணப்பட வேண்டிய பண்புகள் அல்லது தகமைகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் முறையான பரிசீலனையே தொழில் பகுப்பாய்வு ஆகும். வேலைப் பகுப்பாய்வின் மூலம் பெற்றுக்கொள்ளும் தகவல்களானவை வேலை விபரணங்களையும் வேலை குறித்துரைத்தலையும் தயாரிப்பதற்குத் துணையாகப் பயன்படுத்தப்படும்.

இங்கு வேலை விபரணம் என்பது யாதேனும் வேலையொன்றிற்குரிய பணிகள், கடமைகள், பொறுப்புக்கள், வேலை நிபந்தனைகள் என்பவற்றை விபரிக்கும் கூற்று ஆகும்.

வேலையொன்றை நிறைவேற்றுவதற்கு வேலையைப் பொறுப்பேற்பவரிடம் காணப்படவேண்டிய தகைமைகளை உள்ளடக்கிய ஆவணம் வேலை குறித்துரைத்தல் ஆகும்.

**மனிதவளத் திட்டமிடல்**

நிறுவனமொன்றின் நோக்கத்தினையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கும் எதிர்கால ஊழியர்கள் தேவையினைத் தீர்மானிப்பதற்கும் அத் தேவையினை நிறைவு செய்வதற்காகவும் எடுக்கவேண்டிய நடைமுறைகளைத் தீர்மானிப்பது தொடர்பான செயலொழுங்கு மனிதவளத் திட்டமிடலாகும். மனிதவளத் திட்டமிடலின் படிமுறைகளாக,

- எதிர்கால மனிதவளத் தேவையினை (கேள்வியினை) எதிர்வுகூறல்.
- மனிதவள நிரம்பலைக் கணிப்பிடல்
- மனிதவளக் கேள்வியையும் நிரம்பலையும் ஒப்பிடல்
- மனிதவளத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எடுக்கவேண்டிய உபாய வழிமுறைகளை விருத்திசெய்தல்
- மனிதவளத் திட்டமிடல் செயற்பாட்டினை மதிப்பிடல்

**எதிர்கால மனிதவளத் தேவைகளை எதிர்வுகூறும் போதும் கவனத்திற் கொள்ளப்படும் விடயங்கள்**

- பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான கேள்வி
- நிறுவனத்தின் குறிக்கோள்
- உற்பத்தி முறை
- எதிர்காலத்தில் ஊழியர் ஓய்வு பெறல்

- தானாக விலகும் ஊழியர்களின் எண்ணிக்கை
- பதவியுயர்வு பெறுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை
- எதிர்கால செயற்றிட்டம்
- சேவைக்காலத்தை நிறைவு செய்தல்

மனிதவளம் தொடர்பான கேள்வி எதிர்வுகூறல் என்பது மனிதவளக் கேள்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளின் எதிர்காலத் தாக்கங்களை இயலுமான வகையில் சரியாக மதிப்பிட்டு, குறித்த காலத்திற்கு நிறுவனத்திற்குத் தேவையான ஊழியர்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் ஆகும்.

**மனிதவளத் திட்டமிடலின் மூலம் நிறுவனத்திற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள்**
- எதிர்காலத்தில் ஊழியர் தேவையினை உறுதிப்படுத்தலாம்.
- மனித வளத்தினை மிகவும் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தலாம்
- ஊழியர்களது கிரயத்தினைக் குறைக்கலாம்.
- ஊழியர்களின் விருத்தி
- உபாய முறையிலான திட்டமிடலை உருவாக்கலும், செயற்படுத்தலும்

**ஆட்சேர்ப்பு**

அமைப்பொன்றின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு நிறுவனத்திற்குத் துணையாக அமையும் திறன்களையும் நேர் மனப்பாங்குகளையும் கொண்ட தொழில் எதிர்பார்ப்பாளர்களை நிறுவனத்தில் ஈர்த்துக்கொள்ளும் செயற்பாடே ஆட்சேர்ப்பு எனப்படும். இதன் பெறுபேறாக தொழில் எதிர்பார்ப்பாளர்களின் பட்டியலொன்று உருவாவதே ஆகும்.

**ஆட்சேர்ப்புக்கான கருமங்கள்**
- வேலை வெற்றிடயங்களை இனங்காணல்
- வேலை குறித்துரைத்தலை விளங்கிக்கொள்ளல்
- ஆட்சேர்ப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணல்
- விண்ணப்பங்களை தயாரித்தல்
- உள்வாரி, வெளிவாரி ஆட்சேர்ப்பு வழிமுறைகளைத் தெரிவு செய்தல்
- செயற்படுத்துதல்
- மதிப்பீடு

நிறுவனத்திற்குத் தேவையான நபர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் போது நிறுவனத்தின் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான கொள்கையே அதன் பிரதான காரணியாகும். இங்கு நிறுவனத்தின் உள்ளே இருக்கும் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வது அகரீதியான ஊழியர்களை சேர்த்துக்கொள்ளலாகும். இவ்வாறு அகரீதியாக ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள்.
- தொழில் அறிவித்தல்
  நிறுவனத்தின் உள்ளே காணப்படும் அறிவித்தல் பலகைகளில் அறிவித்தல்களைப் பிரசுரித்தல், தொழில் வெற்றிடங்கள் தொடர்பாக அறியச் செய்தல்
- திறன் அட்டவணை (தகவல் ஆவணம்)
  குறித்த பதவிக்கான ஊழியர்களது தகமைகளும் திறன்களும் தொடர்பான ஆவணங்களை நடைமுறைப்படுத்தல்
- அகத்தே உள்ள ஊழியர்களை அறிமுகப்படுத்தல்
- பதிலாள் திட்டம்

**அகத்தே உள்ள ஊழியர்களை ஆட்சேர்த்துக்கொள்வதில் அனுகூலங்கள்**
- ஊழியர்கள் தூண்டப்படல்
- சிறந்த ஊழியர் தொடர்பு ஏற்படுதல்

- பொருத்தமான ஊழியர்களை வைத்துக்கொள்ள முடிதல்
- ஆட்சேர்த்தலுக்கும் ஆட்சேர்ப்பதற்குமான செலவுகள் குறைவடைதல்
- ஊழியர்களுக்கு நிறுவனத்திடம் காணப்படும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அதிகரிக்கும்

**பிரதிகூலங்கள்**
- நவீன அறிவு நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படாதிருக்கும்
- பயிற்சிக்காகக் கூடிய செலவுகளை ஏற்கவேண்டிய ஏற்படும்
- ஊழியர்களிடையே தேவையற்ற வகையில் போட்டி உருவாதல்

நிறுவனத்தின் புறத்தேயிருந்து விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்ளுதல் புறத்தே இருந்து ஆட்சேர்த்தலாகும். நிறுவனமொன்றிற்கு பயன்படுத்தக்கூடிய புறத்தேயிருந்தான ஆட்சேர்ப்பு முறைகள்.
- ஊடக விளம்பரங்கள் மூலம்
- கடந்தகால ஊழியர்கள் மூலம்
- கல்வி, தொழில்சார் நிறுவனங்கள் மூலம்
- தொழில் முகவர் நிலையங்கள் மூலம்
- இணைய வலையமைப்பின் மூலம்

**புறத்தேயிருந்து ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதனால் அனுகூலங்கள்**
- புதிய அறிவுடைய தனிநபர்களை ஆட்சேர்த்துக்கொள்ள முடிதல்
- கூடுதலான பிரிவினர்களை ஆட்சேர்த்துக்கொள்ள முடிதல்

**பிரதிகூலங்கள்**
- தற்போது நிறுவனத்தில் காணப்படும் ஊழியர்களின் ஊக்கத்தில் தடை ஏற்படல்
- ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அதிக செலவுகள் ஏற்படும்
- ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அதிக காலம் எடுக்கும்.

தனிநபர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வேலை விளம்பரப்படுத்தல் பிரசுரிக்கப்படுகின்றது. இவ் வேலை விளம்பரமொன்றில் உள்ளடக்கப்படும் தகவல்கள் பின்வருமாறு:
- பதவியின் பெயர்
- வயது எல்லை
- வேலை நிபந்தனைகள்
- கல்வியும் மற்றும் தொழில்சார் தகமைகளும்
- அனுபவம்
- சம்பளத்திட்டம்

தொழிலுக்கு விண்ணப்பிப்பதற்குத் தனிநபர்களைத் தூண்டச் செய்வதற்காக முன்மாதிரி வாக்கியங்கள், படங்கள் என்பவற்றை வேலை விளம்பரப்படுத்தல் ஒன்றில் உள்ளடக்கமுடியும்.

**வேலை விளம்பர அறிவித்தல்களை பிரசுரிக்கும் ஊடகங்கள்**
- பத்திரிகை
- இணைத்தளம்
- தொலைக்காட்சி
- வானொலி
- அரச வர்த்தகமானி
- சுவரொட்டி
- அறிவித்தல் பதாகைகள்

**தெரிவு செய்தல்**

ஆட்சேர்ப்புக்கு பெறப்பட்ட விண்ணப்பதாரிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகளை இனங்காணும் கருமம் தெரிவு செய்தலாகும். தொழில் வெற்றிடங்களை

நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான நபரைத் தெரிவு செய்வதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் பின்வருமாறு:

- விண்ணப்பங்களை மதிப்பிடல்
- நேர்முகப் பரீட்சை
- உளச்சார்புப் பரீட்சை
- ஆளுமைப் பரீட்சை
- செய்முறைப் பரீட்சை
- பின்னணிப் பரீட்சை
- மருத்துவப் பரிசோதனை

**விண்ணப்பங்களை மதிப்பிடலின் அனுகூலங்கள்**

- விண்ணப்பதாரிகளை ஒப்பீடு செய்வது இலகுவாதல்
- நேர்முகக் கலந்துரையாடலுக்கு வழிகாட்டலாக அமைதல்
- கையெழுத்து, எழுத்து வடிவம் போன்ற தகவல்களைத் தேவையான போது பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான முறையொன்றாக இருத்தல்
- தெரிவு செய்த விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட கோவைகளைத் தயாரிப்பதற்கு உதவியாக இருத்தல்
- ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் உயர் மதிப்பினைப் பெறுதல்

**பிரதிகூலங்கள்**

- விண்ணப்பதாரியினை தனிப்பட்ட முறையில் காணமுடியாமையினால் பார்வை, நடத்தை, மொழிப் பிரயோகம் போன்ற ஆளுமைக் காரணிகளின் அடிப்படையில் மதிப்பிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமை.
- விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கு கூடுதலான காலத்தினை செலவழிக்க வேண்டியிருத்தல்.
- பிழையான தகவல்களை முன்வைப்பதற்கு முடியுமாக இருத்தல்.

**நேர்முகப் பரீட்சையின் அனுகூலம்**

- தொடர்பாடல் திறன், சமூகமயத் தன்மை, நடையுடை பாவனை, நடத்தை போன்ற பண்புகளுக்கேற்ப விண்ணப்பதாரியினை மதிப்பீட்டுக்கு உட்படுத்தலாம்.
- விண்ணப்பத்தில் உள்ளடக்கப்படாத எனினும் முக்கியமான தகவல்களை அறியமுடியும்.
- தொழில் விண்ணப்பதாரிக்கு நிறுவனம் தொடர்பாகவும், பதவி தொடர்பாகவும் விளக்கமொன்றினைப் பெறமுடியும்.

**பிரதிகூலங்கள்**

- விண்ணப்பதாரியினால் வழங்கப்படும் பதில்கள் வேண்டுமென்றே பரீட்சகரினால் திரிவுபடுத்தக்கூடியதாக இருத்தல்.
- கிரயம் மிகக் கூடுதலாக இருத்தலும் கூடுதலான காலம் தேவைப்படுதலும்
- விண்ணப்பதாரி போலியான நடத்தையைக் காட்ட முயற்சித்தல்
- நேர்முகப்பரீட்சை நடாத்துபவர்களினால் இடம்பெறக்கூடிய குறைபாடுகள்
  உதாரணம் - பக்கச்சார்பாகச் செயற்படல்
- சில தொழில்களுக்குப் பொருத்தமற்றதாயிருத்தல்
- விண்ணப்பதாரி தேவையற்ற பயத்திற்கு உள்ளாகுதல்.
- சவால்களுக்கு முகங்கொடுப்பதற்குள்ள திறனை பரீட்சிப்பதற்கு உளச்சார்புப் பரீட்சை முக்கியமானதாகும்.
- உயர்மட்டத் தொழில்களுக்குத் தெரிவு செய்யும் போது ஆளுமைப் பரீட்சை முக்கியமானது.
- செயல்ரீதியான திறன் தேவைப்படும் தொழில்களுக்குத் தெரிவு செய்வதற்குச் செய்முறைப் பரீட்சை தேவையானது.
- விண்ணப்பதாரியின் பின்னணியை அறிந்துகொள்வதற்கு நடாத்தப்படுகின்ற விசேட தேடல் முறை பின்னணிப் பரீட்சை ஆகும்.

- தொழில் விண்ணப்பதாரி ஒருவருக்கு தொழிற் கருமங்கள், பணிகள், பொறுப்புக்கள் என்பவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சிறந்த தேகாரோக்கிய நிலை காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடாத்தப்படுகின்ற பரிசோதனை மருத்துவப் பரிசோதனை எனப்படும்.

**பதவியில் அமர்த்தல்**

தெரிவு செய்த பொருத்தமான தனிநபர்களை தொழிலுக்கு நியமனம் செய்யும் செயலொழுங்கு முறையே வேலையில் சேர்த்துக்கொள்ளல் அல்லது பதவியில் அமர்த்தல் எனப்படும். இதன் போது நியமனக் கடிதம் தயாரிக்கப்படுவது அவசியமானதாகும். பணியாளரொருவர் பணிக்கு நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் அவருக்கு அல்லது அவளுக்கு வேலைகள் தொடர்பான நியமங்கள், நிபந்தனைகள், கருமங்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை விபரமாகக் குறிப்பிட்டுக் காட்டி முகாமையின் மூலம் வழங்கப்படும் சட்டரீதியான எழுத்தாவணமே நியமனக்கடிதம் எனப்படும். இது தொழில் ஒப்பந்தமொன்று ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் சான்றாகும். நியமனக் கடிதமானது சட்டரீதியான எழுத்தாவணம் ஒன்றாக இருப்பதனால் அது தொழில் கொள்வோருக்கும் தொழில் வழங்குநருக்கும் முக்கியமானது. சில பதவிகள் தொடர்பாக நியமனக் கடிதங்களுக்கு மேலாக தொழில் ஒப்பந்தமொன்றிலும் கையொப்பமிடுதல் வேண்டும்.

**நியமனக்கடிதம் ஒன்றில் உள்ளடக்கப்படும் முக்கியமான விடயங்கள்**

- பதவியின் பெயர்
- தொழில் கொள்வோரினதும், தொழில் தருனரினதும் பெயர்
- தொழில் ஆரம்பிக்கும் திகதி
- தொழில் தொடர்பான நிபந்தனைக்ள
- சம்பளம்
- தகுதிகாண் காலம்
- வேலை செய்யும் மணித்தியாலங்கள் அல்லது நாட்களின் எண்ணிக்கை
- அனுகூலங்கள்
- ஒழுக்கம் தொடர்பான செயல்முறைகள்
- பணியாளர் உரிமைகளும் சலுகைகளும்
  உதாரணம் : விடுமுறை, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி
- வேலையை முடிவுறுத்தல்
- சுக துக்கங்களை முன்வைக்கக்கூடிய முறை
- நிரந்தரமாக்குதலும் பதவியுயர்வும்
- பணியாளரினதும் (தொழில் பெறுநரினதும்) தொழில் தருனரினதும் கையொப்பம்

**தொழில் இசைவாக்கம்**

புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில் பெறுநர் ஒருவர் முதலாவதாக நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தலும் அவருக்கு / அவளுக்கு தனது வேலை, வேலைக்குழு, வேலைச்சூழல் என்பவற்றுடன் பொதுவாக நிறுவனம் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொடுக்கும் கருமமே தொழில் இசைவாக்கம் எனப்படும். இசைவாக்கத்திற்கு பணியாளரின் குறிப்பேடு, தகவல் பத்திரம், பழைய ஊழியர்களைப் பயன்படுத்தல், வீடியோ திரைப்படம், நிறுவனத்தினுள் களச் சுற்றுலா, விரிவுரை போன்ற வேறுபட்ட முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

பதவியில் இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய ஊழியர் அப் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் தகுதிகாண் சேவையினை செய்யவேண்டிய காலம் தகுதிகாண் காலமாகும். தகுதிகாண் காலத்தினுள் ஊழியருக்குத் தனது கருமங்களை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு இயலாதுவிடின் முகாமைக்குப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

- வேலையை முறுவுறுத்தல்
- வாய்மொழி, எழுத்து மூலம் எச்சரிக்கை செய்தல்
- தகுதிகாண் காலத்தை நீடித்தல்
- தண்டனை வழங்குதல் (சம்பளத்தை இடைநிறுத்தல், சம்பளத்தை குறைத்தல்)

ஊழியர் தனது தொழிலை எவ்வளவு காலத்திற்கு வெற்றிகரமாக மேற்கொள்கின்றார் என்பதை தேடியறிந்து பதிவு செய்யும் செயல்முறை செயற்திறன் மதிப்பீடு எனப்படும்.

**செயல்திறன் மதிப்பீட்டின் மூலம் தொழில் தருனருக்குக் கிடைக்கப்பெறும் அனுகூலங்கள்**

- பயிற்சியளிக்கும் தேவையினை இனங்காணல்
- பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பாக தீர்மானம் எடுத்தல்
- ஒழுக்காற்று நடைமுறைகளை எடுப்பதற்கு

**செயல்திறன் மதிப்பீட்டின் மூலம் தொழில் கொள்வோனுக்கு கிடைக்கப்பெறும் அனுகூலங்கள்**

- ஊழியர் விளைதிறன் அதிகரித்தல்.
- ஊழியர் ஊக்கப்படுத்தல் உயர்வடைதல்
- பயிற்சித் தேவைகளை இனங்காணல்

**பயிற்சியும் அபிவிருத்தியும்**

குறிப்பிட்ட செயற்திறன் மதிப்பீட்டிற்கு பணியாளர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேலோங்கச் செய்வதற்கான முறையான நடைமுறை பயிற்சியாகும்.

முகாமைத்துவப் பணியாளர்களின் நிகழ்கால நிலைமைகளை விட எதிர்கால செயற்பாட்டினை மேலும் விருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடைமுறையே அபிவிருத்தியாகும்.

பயிற்சி

அபிவிருத்தி

- அனேகமாக முகாமையாளரல்லாத பணியாளர்களுக்குத் தொழில் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தல்.
- முகாமைப் பணியாளர்களுக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்குகளைப் பெற்றுக்கொடுத்தல். நிகழ்கால தொழிலில் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்காக பணியாளர்களை அயத்தப்படுத்தல்.
- எதிர்காலத் தொழில் தேவையினை நிறைவேற்றுவதற்கு முன்பான செயல்களைக் காட்டும் செயல்முறையாகும்.
- குறுங்கால வேலைத்திட்டம் ஒன்றாகும்.
- தொடர்ந்து நடாத்திச்செல்லும் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றாகும்.
- செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவு, மனப்பாங்கு என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பது இடம்பெறும்.
- அனேகமாக எண்ணக்கருவாக்கத் திறன்களைப் பெற்றுக்கொடுக்கும்.

| பயிற்சி | அபிவிருத்தி |
|---|---|
| • அனேகமாக முகாமையாளரல்லாத பணியாளர்களுக்குத் தொழில் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தல். | • முகாமைப் பணியாளர்களுக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்குகளைப் பெற்றுக்கொடுத்தல். |
| • நிகழ்கால தொழிலில் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்காக பணியாளர்களை அயத்தப்படுத்தல். | • எதிர்காலத் தொழில் தேவையினை நிறைவேற்றுவதற்கு முன்பான செயல்களைக் காட்டும் செயல்முறையாகும். |
| • குறுங்கால வேலைத்திட்டம் ஒன்றாகும். | • தொடர்ந்து நடாத்திச்செல்லும் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றாகும். |
| • செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவு, மனப்பாங்கு என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பது இடம்பெறும். | • அனேகமாக எண்ணக்கருவாக்கத் திறன்களைப் பெற்றுக்கொடுக்கும். |

பயிற்சி, அபிவிருத்தி என்பவற்றின் ஊடாகத் தொழில் தருநருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்
- முடிவுப்பொருளின் தர ரீதியான பண்பு உயர்வடைதல்.
- பணியாளர்களினால் ஏற்படும் தவறுகள் குறைவடைதல்.
- பணியாளர்களின் செயற்பாட்டு அடைவு மேம்பாடடைதல்.

பயிற்சி, அபிவிருத்தி என்பவற்றின் ஊடாகப் பணியாளருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்
- தொழிலில் திருப்தி அதிகரிக்கும்.
- பதவியுயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்.
- செயற்பாட்டு அடைவு உயர்வடையும்.
- ஊழியரின் வாண்மைப் பெறுமதி உயர்வடையும்.

பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல், விருத்தி செய்தல் என்பவற்றிற்காக பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகிறது.
- பயிலுனர்களைப் பயிற்றுவித்தல்.
- தொழிலினூடாகப் பயிற்சி.
- தொழில் சுழற்சி முறை
- நடிபாங்கு / கடமைப் பங்காற்றல் முறை
- பயிற்சியும் அபிவிருத்தியும் வேலைத்திட்டம் (உள்நாட்டு அல்லது வெளிநாட்டு)

## ஊழியர் அசைவுகள்

ஊழியர் தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் ஊழியர் அசைவு அல்லது நகர்வு செய்தல் எனப்படும். ஊழியர் அசைவினை பின்வரும் முறைகளில் மேற்கொள்ளலாம்.
- பதவி உயர்வு (Promotion)
- இடமாற்றம் (Transfer)
- பதவி நீக்கம் (Dismisal)
- பதவி இறக்கம் (Demotion)
- வேலையை முடிவுறுத்தல் (Redundancy)

மனிதவள முகாமைத்துவக் கருமங்களை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நியதிகள்
- ஊழியப் புரள்வு
- ஊழியர் வரவின்மை
- ஊழிய உற்பத்தித்திறன்
- தொழில் உறவுகள்

## ஊழியப் புரள்வு / ஊழியர் புரள்வு

ஏதாவது காலமொன்றினுள் ஊழியர்கள் நிறுவனத்திலிருந்து விலகிச் செல்லும் அளவு ஊழியப் புரள்வு / ஊழியர் புரள்வு எனப்படும்.

$$\text{ஊழியர் புரள்வு} = \frac{\text{குறித்த காலமொன்றில் விலகிச் சென்ற ஊழியர்களின் எண்ணிக்கை}}{\text{அக் குறித்த காலத்திலே சேவையில் ஈடுபட்டிருந்த சராசரி ஊழியர்கள் எண்ணிக்கை}} \times 100$$

## ஊழியர் வரவின்மை

ஊழியர்கள் வேலைக்கு வராமலிருத்தல் ஊழியர் வரவின்மை எனப்படும்.

## ஊழிய விளைதிறன்

ஊழியர் உள்ளீடு, வெளியீடு என்பவைகளுக்கிடையிலான தொடர்பு ஊழிய விளைதிறன் எனப்படும்.

$$\text{ஊழியர் உற்பத்தித்திறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{ஊழியர்களின் எண்ணிக்கை}}$$

ஊழியர்கள் விருப்பத்துடனும், திருப்தியுடனும் தொழிலைச் செய்வதற்குச் சிறந்த ஊழியர் தொடர்பு உதவுகின்றது.

### ஊழியர் உறவு

தொழில் கொள்வோர், ஊழியர் (தொழிலாளர்) ஆகிய இரு பிரிவினர்களுக்குமிடையே காணப்படும் யாதேனும் ஒரு முறையிலான தொழில் உறவு (சிறந்த அல்லது பொருத்தமற்ற உறவு) ஊழியர் உறவு அல்லது கைத்தொழில் உறவு எனப்படும்.

### சிறந்த ஊழியர் உறவின் பயன்கள்

- நிறுவனத்தின் ஊழியர் விளைதிறன் அதிகரிக்கும்.
- கைத்தொழில் பிணக்குகள் குறைவடைவதனால் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாகப் பாய்ந்துசெல்லும்.
- வளங்களின் வீண்விரயங்கள் குறைவடையும்
- ஊழியர் வரவின்மை குறைவடையும்
- ஊக்கமுள்ள ஊழியர் குழுவொன்று உருவாகும்
- ஊழியர் புரள்வு குறைவடையும்

### பொருத்தமற்ற ஊழியர் உறவின் காரணமாக ஏற்படக்கூடிய தீய விளைவுகள்

- ஊழியர் போராட்டம், வேலை நிறுத்தங்கள் என்பவை காரணமாக வணிகச் செயற்பாடுகள் தடைப்படும்.
- ஊழியர் விளைதிறன் பாதிக்கப்படல்
- ஊழியர் உளரீதியாக பாதிக்கப்படல்.
- வளங்கள் வீணடிக்கப்படல்
- முழு நிறுவனத்தினதும் விளைதிறனும் வினைதிறனும் பாதிக்கப்படல்.

ஊழியர்களுக்கு ஒப்படைக்கப்படும் கருமங்களை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வேலை ஒப்பந்தங்கள், கட்டளைச் சட்டமூலங்கள், சட்டங்கள் என்பகைவள் மூலம் அவர்களுக்கு கிடைக்கப்பெறும் உரிமைகள் ஊழியர் உரிமைகள், சலுகைகள் எனக் குறிப்பிடப்படும். அவ் வகையில் ஊழியர் உரிமைகளாக,

- வேலைக்கேற்ற சம்பளத்தையும் சிறந்த வேலைச் சூழல் ஒன்றையும் பெற்றுக்கொள்ளல்
- விருப்பு உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்
- தொழில் ரீதியான உடல், தொழில் என்பவற்றிற்கு ஏற்படும் இடர்களுக்கான பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
- தொழிற் சங்கங்களை நிறுவுதல்.

### *ஊழியர் பொறுப்புக்களாக,*

- அமைப்பின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய முறையில் வேலை செய்தல்.
- வேலை செய்யுமிடத்தில் ஒழுங்கா நடந்துகொள்ளல்.
- வேலை ஒப்பந்தத்திற்கேற்ப கருமங்களை மேற்கொள்ளல்.

### *தொழில்வழங்குனரது பொறுப்புக்களாக,*

- வணிக நோக்கம் தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- தெளிவான ஒழுக்கக்கோவை ஒன்றினை நடைமுறைப்படுத்துதல்.
- நியாயமான சம்பளத்தையும் சிறந்த வேலைச் சூழல் ஒன்றையும் நடைமுறைப்படுத்தல்
- ஊழியர் பயிற்சி, அபிவிருத்தி, நலன்புரி என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தல்.

### கைத்தொழில் பிணக்கு

தொழில் தருனருக்கும் ஊழியருக்கும் இடையில் தோன்றுகின்ற தொழிலுடன் இணைந்த பிணக்குகளை கைத்தொழில் பிணக்கு எனலாம்.

தொழிற்சங்கம்

தொழில் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் ஏதாவதொரு தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் கொள்வோர் அல்லது ஊழியர் குழுவினர் தன்னிச்சையாக உருவாக்கிக்கொள்ளும் அமைப்பு தொழிற்சங்கம் எனப்படும். இச் தொழிற்சங்கம் ஒன்றின் நோக்கங்களாக,

- நியாயமான சம்பளத்தினையும் சிறந்த வேலைச் சூழல் ஒன்றினையும் பெற்றுக்கொடுத்தல்.
- வேலை செய்யும் நேரத்தைக் குறைத்துக்கொள்ளல்.
- தொழில் நலன்களையும் தொழில் ரீதியான இடர்களிலிருந்து பாதுகாப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- நிறுவனத்தின் முகாமைத்துவத் தீர்மானங்களில் கலந்துகொள்ளல்.
- தொழில் பாதுகாப்பினை உருவாக்கிக் கொடுத்தல்.
- கல்வியினையும் பயிற்சியினையும் பெற்றுக்கொடுத்தல்.
- சுகவீன, ஓய்வூதிய அல்லது வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

தொழிற்சங்க நடைமுறைகள்

- கூட்டுப் பேரம் பேசுதல்
- சட்டப்படி வேலை செய்தல்
- மெதுவாக வேலை செய்தல்
- மேலதிக நேர வேலைகளில் ஈடுபடாதிருத்தல்
- வேலைப் புறக்கணிப்பு – அடையாள வேலைநிறுத்தம், தொடர்ச்சியான வேலைநிறுத்தம்

ஊழியர் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்தில் தொழிற்சங்கத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் இடையே இடம்பெறும் கலந்துரையாடல் செயற்பாடு **கூட்டுப் பேரம் பேசுதல்** எனப்படும்.

வேலைகொள்வோர், ஊழியர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்குமிடையே ஏதாவது தொழில் பிணக்குத் தொடர்பாக ஏற்படுத்திக்கொள்ளும் உடன்பாடு **கூட்டு ஒப்பந்தம்** எனப்படும்.

நிறுவனத்தின் மிகவும் குறைந்த சட்டதிட்டங்களையேனும் பின்பற்றி மிகக் குறைந்த வேலை அளவினை மேற்கொள்வது **சட்டப்படி வேலை செய்தலாகும்**. இதன் காரணமாக செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெறுவதுடன் நிறுவனத்தின் செலவுகள் அதிகரிக்கும்.

ஊழியர்கள் தமது கருமங்களை வேண்டுமென்றே மெதுவாக மேற்கொள்ளுதல் **மெதுவாக வேலை செய்தல்** எனப்படும்.

ஊழியர்களின் வழமையான வேலை நேரத்தின் பின்னர் வேலை செய்வதைப் புறக்கணித்தல் **மேலதிக நேர வேலையில் ஈடுபடாதிருத்தலாகும்**.

நாளொன்று, பகுதி நேரம் எனும் வகையில் ஒரு குறிப்பிட்ட காலத்தினுள் முகாமைத்துவத்திற்கு அறிவித்து தமது வேலையிலிருந்து ஒதுங்கியிருத்தல் **அடையாள வேலைநிறுத்தம்** எனப்படும்.

தமது கோரிக்கைகளை கலந்துரையாடல் மூலம் அல்லது வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் வெற்றிகொள்வதற்கு முடியாதவிடத்து ஊழியர்கள் வேலை செய்வதை முற்றாக நிறுத்துதல் **தொடர் வேலைநிறுத்தம்** எனப்படும்.

எனவே வணிகங்கள் தமது வரையறைக்குட்பட்ட மனித வளங்களை மிகவும் சிறந்த முறையில் பயன்படுத்தக்கூடிய நுட்ப முறைகளை எவ்வேளைகளிலும் பயன்படுத்தி அதிக வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்தல் வேண்டும்.

## References:


- ஜெகத் பண்டார, ., வணிகக் கல்வி – பகுதி II
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி – தரம் 13



# கிரய நடத்தைகள், கிரய அளவு, இலாப பகுப்பாய்வு என்பவற்றினூடாக முகாமைத் தீர்மானம் எடுத்தல்

குறுங்கால தீர்மானம் எடுப்பதற்காக கிரய நடத்தை மதிப்பீடு செய்வது இன்றியமையாதது. கிரய கிரய அளவு ரீதியான மாற்றத்திற்கமைய கிரயம் வேறுபடுவது "கிரய நடத்தை" எனப்படும். இக் கிரய நடத்தையினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.


1) நிலையான கிரயம்
2) மாறும் கிரயம்
3) பகுதி நிலையான கிரயம்
4) பகுதி மாறும் கிரயம்


### நிலையான கிரயம் (Fixed cost)

ஏதேனும் உற்பத்தி அல்லது கிரய வரையறைக்குள் வணிகத்தின் செயற்பாட்டு மட்டம் மாறுவதற்கு இணைவாக மாறுபடாத ஏதேனும் காலத்திற்காக ஏற்றுக்கொள்ள வேண்டிய கிரயம் நிலையான கிரயம் என அழைக்கப்படும். அதாவது வெளியீட்டு அலகுகளின் அதிகரிப்பால் அல்லது குறைவால் பாதிக்கப்படாத ஒரு கிரயமாகும். நிலையான கிரயமானது காலத்துடன் தொடர்புடையதாகையால் காலக்கிரயம் எனவும் அழைக்கலாம்.

உதாரணம் : முகாமை இயக்குனர் சம்பளம், தொழிற்சாலை வாடகை, நேர்கோட்டு முறையிலான தேய்மானம்.

நிலையான கிரயம் தொடர்பான வரைபுகள் பின்வருமாறு.









### மாறும் கிரயம் (Variable cost)

செயற்பாட்டு மட்டத்தில் அல்லது உற்பத்தி அல்லது விற்பனை விகிதத்திற்கு ஏற்ப நேர் விகிதமாக வேறுபடும் கிரயம் மாறும் கிரயமாகும். அதாவது உற்பத்தி அல்லது விற்பனை அதிகரிக்கும் போது கிரயம் அதிகரிக்கும். உற்பத்தி அல்லது விற்பனை குறையும் போது கிரயம் குறையும்.

உதாரணம் :- கூலிக்கிரயம், மூலப்பொருள் கிரயம், இறைக் கொடுப்பனவுகள், விற்பனைத்தரகு

மாறும் கிரயத்தை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.







**பகுதி நிலையான கிரயம் / படிமுறை நிலையான கிரயம்**

**(Semi fixed cost / Steps cost)**

ஏதாயினும் கிரயமொன்று செயற்பாட்டு மட்டம் வேறுபடும் போது படிப்படியாக வேறுபடுமாயின் அந்தக் கிரயம் பகுதி நிலையான கிரயம் எனப்படும். அநேகமான கிரயங்கள் ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டு மட்டத்திற்குள் நிலையானவையாக இருக்கின்ற இயல்பைக் கொண்டுள்ளன.


உதாரணம் : மாதாந்த உற்பத்தி 1000 அலகுகளுக்கு உட்பட்டதாயின் ஒரு இயந்திரத்திற்கான தேய்மானம் நிலையானதாக இருக்கலாம். உற்பத்தி 1000 அலகுகளுக்கு மேற்படின் இரண்டாவது இயந்திரம் தேவைப்படலாம். எனவே தேய்மானம் அதிகரிக்கும்.




**பகுதி மாறும் கிரயம் / கலப்புக் கிரயம்**

**(Semi Variable cost / Mixed cost)**

ஏதேனும் கிரய உருப்படிக்குள் மாறும் கிரயமும் நிலையான கிரயமும் அடங்கியிருக்குமாயின் பகுதி மாறும் கிரயம் எனப்படும். அதாவது நிலையான மூலம், மாறும் மூலம் இரண்டையும் கொண்டதும், அவற்றில் ஒரு பகுதி செயற்பாட்டு தளம்பல்களால் பாதிப்பிற்கு உட்படுவதுமான கிரயம் இதுவாகும். உதாரணம் - நிறுவனத்தின் தொலைபேசிக் கட்டணம் (நிலையான தொலைபேசிக் கட்டணமும், அழைப்புக்கேற்ப மாறுபடுகின்ற தொலைபேசிக் கட்டணமும்), மின்சாரக் கட்டணம், விற்பனையாளர் சம்பளம், மோட்டார் வண்டி ஓட்டக் கிரயம்.







**பங்களிப்பு (Contribution)**

விற்பனை வருமானம், மாறும் கிரயம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு பங்களிப்பு ஆகும். இது ஒரு அலகுக்காக அல்லது பொதுவாகக் கணிப்பிட முடியும். அதாவது விற்பனைக்கும் எல்லைக் கிரயத்திற்கும் இடையிலான வேறுபாடு பங்களிப்பாகும். இங்கு எல்லைக் கிரயம் எனப்படுவது நேர்க்கூலி, நேர் மூலப்பொருள், நேர் பிற செலவுகள், மாறும் மேந்தலை என்பவற்றைக் கொண்ட மாறும் கிரயமாகும்.

- அலகொன்றுக்கான பங்களிப்பு = விற்பனை விலை – மாறும் கிரயம்
- மொத்தப் பங்களிப்பு = மொத்த விற்பனை விலை – மொத்த மாறும் கிரயம்

மொத்தப் பங்களிப்பில் நிலையான கிரயத்தை ஈடுசெய்த பின்னர் மீதியாக இருப்பது இலாபமாகும்.

**பங்களிப்பு விற்பனை விகிதம் / இலாப அளவு விகிதம்**

விற்பனை வருமானத்தில் பங்களிப்பின் அளவினை இது பிரதிபலிக்கும். இது பங்களிப்பு விற்பனை விகிதம் எனப்படும். இவற்றைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\text{பங்களிப்பு விற்பனை விகிதம்} = \frac{\text{மொத்தப் பங்களிப்பு}}{\text{மொத்த விற்பனை வருமானம்}} \times 100$$

பங்களிப்பு விற்பனை விகிதம் = $\frac{\text{அலகு பங்களிப்பு}}{\text{அலகொன்றின் விற்பனை விலை}}$ x 100

**சமப்பாட்டுப் புள்ளி / கிரய தொகை இலாபப் பகுப்பாய்வு / இலாபநட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வு**
**Break-Even Point(BEP) / Cost Volume Profit Analysis (CVP analysis)**

பல்வேறு செயற்பாட்டு மட்டங்களில் கிரயம், தொகை, இலாபம் என்பவற்றுக்கிடையேயான தொடர்பை ஆய்வு செய்கின்ற ஒரு பகுப்பாய்வு சமப்பாட்டுப் புள்ளிப் பகுப்பாய்வு எனப்படும். நிறுவனங்களின் மொத்த வருமானம், மொத்த செலவு சமமாகின்ற செயற்பாட்டு மட்டம் சமப்பாட்டுப் புள்ளி எனப்படும். அதாவது மொத்த வருமானமும் மொத்தக் கிரயமும் சமனாக இருக்கின்ற விற்பனைத் தொகையாகும். இங்கு இலாபமோ அல்லது நட்டமோ இருக்காது. இது இலாபநட்டமற்ற புள்ளியாக வரையறுக்கப்பட்டு இலாபநட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வு எனப்படுகிறது. இலாபப் பகுப்பாய்வு தனியே இலாபநட்டமற்ற புள்ளியை மட்டும் வெளிப்படுத்துவதில்லை. பல்வேறு செயற்பாட்டு மட்டங்களிலும் செலவு, தொகை, இலாபம் என்பவற்றை வெளிப்படுத்துவதால் செலவு – தொகை - இலாபப் பகுப்பாய்வு எனவும் கூறப்படுகின்றது.

**சமப்பாட்டுப் புள்ளியின் கருதுகோள்கள் / எடுகோள்கள்**

- மொத்தக் கிரயமானது நிலையான கிரயம் மாற்றும் மாறும் கிரயம் என வகைப்படுத்தப்படும்.
- மொத்த நிலையான கிரயம் மாற்றமடையாது.
- மொத்த மாறும் கிரயம் செயற்பாட்டு மட்டத்துக்கு ஏற்ப சமனான விகிதத்தில் மாற்றமடையும்.
- தொழில்நுட்பம், உற்பத்தி முறை, வினைத்திறன் ஆகியன மாற்றமுறாது இருக்கின்றது.
- வருமானம், கிரயம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரே காரணியாக செயற்பாட்டு மட்டத்திற்கான அளவு காணப்படுகின்றது.

சமப்பாட்டுப்புள்ளி (அலகுகளில்) = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$

சமப்பாட்டுப்புள்ளி (ரூபாவில்) = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{பங்களிப்பு விற்பனை விகிதம்}}$

**பங்களிப்பு விற்பனை விகிதம் / இலாப அளவு விகிதம்**
**(Contribution sales ratio / Profit volume ratio)**

விற்பனை வருமானத்தில் பங்களிப்பின் அளவினை காட்டுவது பங்களிப்பு விற்பனை விகிதம் எனப்படும்.

பங்களிப்பு விற்பனை விகிதம் = $\frac{\text{மொத்தப் பங்களிப்பு}}{\text{மொத்த விற்பனை வருமானம்}}$ x 100

பங்களிப்பு விற்பனை விகிதம் = $\frac{\text{அலகுப் பங்களிப்பு}}{\text{அலகொன்றின் விற்பனை விலை}}$ x 100

**பாதுகாப்பு எல்லை (Margin of safety)**

பாதீட்டுக் காலத்தில் பாதுகாப்பு எல்லையானது பாதீடு செய்யப்பட்ட விற்பனைத் தொகையை இலாபநட்டமற்ற நிலைமைக்கு தேவைப்படுகின்ற விற்பனைத் தொகையுடன் ஒப்பிடுவதன் மூலம் அளவிடப்படுகின்றது. இது பாதீடு செய்யப்பட்ட விற்பனை அலகுகளிற்கும் இலாபநட்டமற்ற புள்ளியிலான அலகுகளுக்குமிடையிலான வேறுபாடாகும்.

பாதுகாப்பு எல்லை (அலகுகளில்) = பாதீட்டு விற்பனை – சமப்பாட்டுப் புள்ளியின் விற்பனை

பாதுகாப்பு எல்லை (ரூபாவில்) = $\frac{\text{இலாபம்}}{\text{பங்களிப்பு விற்பனை விகிதம்}}$

கிரயம் - அளவு - இலாபப் பகுப்பாய்வு இரண்டு முறையில் முன்வைக்கப்படும்.

1. சமன்பாட்டு வடிவில்
2. வரைபட வடிவில்

உதாரணம் :

வரையறுத்த ராம் கம்பனி அடுத்த ஆறு மாதங்களுக்கான தன்னுடைய உற்பத்திப்பொருள் X தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட தரவுகள் வருமாறு:

அலகொன்றின் விற்பனை விலை ரூபா 100

அலகொன்றின் மாறும் கிரயம் ரூபா 40

எதிர்பார்த்த விற்பனை 4,000 அலகுகள்

நிலையான கிரயம் ரூபா 120,000

கணிப்பு:

01. அலகுக்கான பங்களிப்பு = விற்பனை விலை – மாறும் கிரயம்
= 100 - 40
= ரூபா 60

02. மொத்தப் பங்களிப்பு = மொத்த விற்பனை வருமானம் - மொத்த மாறும் கிரயம்
= 400,000 – 160,000
= ரூபா 240,000

03. பங்களிப்பு விற்பனை விகிதம் = $\frac{\text{பங்களிப்பு}}{\text{விற்பனை}}$ x 100

$= \frac{60}{100} x100$

= 60%

04. i) சமப்பாட்டுப்புள்ளி (அலகுகளில்) = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$

$= \frac{120,000}{60}$

= 2,000 அலகுகள்

ii) சமப்பாட்டுப்புள்ளி (பெறுமதியில்) = $\frac{\text{நிலையான கிரயம்}}{\text{பங்களிப்பு விற்பனை விகிதம்}}$

$= \frac{120,000}{60\%}$

= ரூபா 200,000

05. i) பாதுகாப்பு எல்லை (அலகுகளில்)
= எதிர்பார்த்த விற்பனை அலகு – சமப்பாட்டுப்புள்ளி அலகு
= 4,000 - 2,000
= 2,000 அலகுகள்

ii) பாதுகாப்பு எல்லை (பெறுமதியில்) = $\frac{\text{இலாபம்}}{\text{பங்களிப்பு விற்பனை விகிதம்}}$

$= \frac{2,000 \, x \, 60/=}{60\%}$

=

= ரூபா 200,000

or

= பாதுகாப்பு எல்லை அலகுகளின் அளவு x அலகுக்கான விற்பனை விலை
= 2,000 x 100 = ரூபா 200,000

6. இலாபம் = பாதுகாப்பு எல்லை x அலகிற்கான பங்களிப்பு

= 2,000 x 100 = ரூபா 200,000

or

= மொத்தப் பங்களிப்பு – நிலையான கிரயம்

= ரூபா 240,000 – 120,000 = ரூபா 120,000

7. எதிர்பார்த்த விற்பனை மட்டத்தில் வருமானக்கூற்று

| | ரூபா |
|---|---|
| விற்பனை வருமானம் 4,000 x 100 | 400,000 |
| கழி – மாறும் கிரயம் 4,000 x 40/- | (160,000) |
| | 240,000 |
| கழி – நிலையான கிரயம் | (120,000) |
| இலாபம் | 120,000 |

8. ரூபா 180,000 இலாபம் பெறுவதற்கு விற்பனை செய்யப்பட வேண்டிய அலகுகள்

$$= \frac{\text{நிலையான கிரயம் + எதிர்பார்த்த இலாபம்}}{\text{அலகிற்கான பங்களிப்பு}}$$

= = 5000 அலகுகள்

**வரைபடத்தின் மூலம் சமப்பாட்டுப்புள்ளிப் பகுப்பாய்வு**

சமப்பாட்டுப் புள்ளியானது வரைபட ரீதியாகவும் தீர்மானிக்கப்பட முடியும். "ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் விற்பனைத் தொகையின் பல்வேறு மட்டங்களில் இலாபத்தையும் நட்டத்தையும் சுட்டிக்காட்டுகின்ற ஒரு வரைபடமே இலாபநட்டமற்ற வரைபடம் என வரையறுக்கப்படுகின்றது. இது கிடையச்சில் தொகை / வெளியீட்டு அலகினையும் நிலைக்குத்தச்சில் விற்பனை வருமானத்தையும், கிரயப் பெறுமதியினையும் காட்டக்கூடிய வகையில் தயாரிக்கப்படுகின்றது.


பின்வரும் உதாரணத்தின் மூலம் சமப்பாட்டுப் புள்ளியை வரைபடத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

**சமப்பாட்டுப்புள்ளி அட்டவணை**

| வெளியீடு (அலகுக்களில்) | விற்பனை வருமானம் (ரூபா) | மாறும் கிரயம் (ரூபா) | நிலையான கிரயம் (ரூபா) | மொத்தக் கிரயம் (ரூபா) | இலாபம் / நட்டம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 100,000 | 100,000 | (100,000) |
| 2000 | 200,000 | 160,000 | 100,000 | 260,000 | (60,000) |
| 4000 | 400,000 | 320,000 | 100,000 | 420,000 | (20,000) |
| 5000 | 500,000 | 400,000 | 100,000 | 500,000 | 0 |
| 6000 | 600,000 | 480,000 | 100,000 | 580,000 | 20,000 |
| 8000 | 800,000 | 640,000 | 100,000 | 740,000 | 60,000 |
| 10000 | 10,00,000 | 800,000 | 100,000 | 900,000 | 100,000 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையில் இலாபமோ நட்டமோ அற்ற பூச்சிய நிலையில் சமப்பாட்டுப் புள்ளி தீர்மானிக்கப்படுகிறது. 5000 அலகுகள் வெளியீட்டு மட்டத்தில் ரூபா 500,000 விற்பனை வருமான நிலைமைகளில் சமப்பாட்டுப் புள்ளி காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் புலப்படுத்தலாம்.

## சமப்பாட்டுப் புள்ளி வரைபடம்




சமப்பாட்டுப் புள்ளியானது மொத்தக் கிரயம், மொத்த வருமானத்தை சந்திக்கும் புள்ளியில் இருக்கும். வரைபடத்தில் இது வருமானமும் கிரயமும் ரூபா 500,000 இல் 5,000 அலகுகள் வெளியீட்டு மட்டத்தில் காணப்படுகிறது. பாதுகாப்பு எல்லையானது வரைபடத்தில் பாதீடு செய்யப்பட்ட செயற்பாட்டு மட்டத்திற்கும் இலாபநட்டமற்ற புள்ளிக்கும் இடையிலான வேறுபாட்டால் (10,000 – 5,000) = 5,000 அலகுகளால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை**

குறுங்காலத் தீர்மானமெடுத்தல் கருமமானது முகாமையினால் பங்களிப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய இலாபரத் தீர்மானமெடுத்தல் நோக்கிற்கு உறுதுணையாக அமைவது இவ் சமப்பாட்டுப் புள்ளிப் பகுப்பாய்வு எனில் மிகையாகாது. எல்லைக் கிரயவியல் நுட்பத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது இப் பகுப்பாய்வே ஆகும்.

### References:


- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி – தரம் 13
- K. கலைச்செல்வன்., உயர் கணக்கீடு – பகுதி II



Mrs. Thayalinie Jeyakumar ,
B.Com (Hons), PGDE,
Teacher,
J/Karainagar Hindu College.



# அரசியலில் இளைஞர் பங்கேற்பின் முக்கியத்துவம்

அனைத்து நாடுகளிலும் உள்ள இளைஞர்கள் அபிவிருத்திக்கான பிரதான மனிதவளமாகவும் மற்றும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி அத்துடன் தொழிநுட்ப புத்தாக்கம் போன்றவற்றின் முக்கிய முகவர்களாகவும் காணப்படுகின்றனர். இலங்கையில் தேசிய இளைஞர்கள் கொள்கையானது 15-29 வயதிற்கு இடைப்பட்ட வகுப்பினரை இளைஞராக வரையறுக்கிறது. இலங்கையில் தனது இலட்சிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டின் இளைஞர்களை அதி முக்கிய இடத்தில் வைத்திருக்கின்றது.

அரசியல் பங்கேற்பானது ஆட்சி செய்கிறவர்கள் அல்லது அவ்வாறு செய்கின்றவர்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற நோக்கமாக கொண்ட தனிப்பட்ட அல்லது குழுக்களின் செயற்பாடுகளாய் வரையறுக்க முடியும் அரசியலில் பங்கேற்பு என்ற சொற்பதமானது அனைத்து மட்டங்களில் இருந்தும் மக்களின் தொழிற்பாடுகளிற்கும் பிரயோகிக்கப்படுகின்றன. அதற்கிணங்க பங்கேற்பில் நான்கு வரையறுக்கப்பட்ட முறைகள் காணப்படுகின்றன

01. பிரஜைகளால் தொடக்கி வைக்கப்பட்ட தொடர்புகள்
02. வாக்களித்தல்
03. பிரச்சார செயற்பாடுகள்
04. கூட்டுறவு நடவடிக்கைகள்

இளைஞர்கள் அரசியல் பங்கேற்பானது அவர்கள் அரசியல் தொழிற்பாட்டிலும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றதை குறிக்கின்றது. இது தேர்தல்களில் வாக்களித்தல், தேர்தல்களில் நிற்றல், குடியியல் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல், ஊர்வலங்களிலும் அரசியல் மாநாடுகளிலும் கலந்து கொள்ளுதல், தனியார் தன்னார்வ அமைப்புக்களில் உறுப்பினராக இருத்தல், பிரச்சனைகளை விவாதித்தல், வாக்காளர் பதிவு, கட்சிப்பிரச்சாரம், தேசிய பிரச்சாரம், எதிர்ப்புக்களில் ஈடுபடுதல் போன்ற செயலூக்கம் உள்ள இளைஞர்கள் அரசியல் விவகாரங்கள் ஆகும்.

நாட்டின் பல் திறமை வாய்ந்த ஒழுக்க ஆற்றலுடைய சனத்தொகையின் நிலைத்திருப்பு எப்போதும் புதையலாகவே காணப்படுகின்றது. இது குறிப்பிட்ட நாட்டின் அபிவிருத்திக்கு உதவுகிறது. இளைஞர்கள் தேசத்தின் உயிர்நாடிகள் ஒவ்வொரு வருடமும் க.பொ.த(சா.த) மற்றும் க.பொ.த(உ.த) பரீட்சை அமர்வுகளின் பின்னர் பாடசாலைக் கல்வி முறையில் கிட்டத்தட்ட 150,000 மாணவர்கள் வெளியேறுகின்றனர் ஆகையால் 92% இளைஞர்கள் செழிப்பான வேலைவாய்ப்புக்களை நோக்கி மாற்றுப் பாதையினை நாடுகின்றனர்

அரசியல் பங்கேற்பில் ஈடுபடுகின்ற தனியாளொருவர் அரசாங்க கொள்கைகளில் திருப்தி தொடர்பாக சில ஆக்கங்களை கொண்டிருப்பர். அரசியல் பங்கேற்பு தனிப்பட்ட வாழ்க்கை திருப்தியினையும் மகிழ்ச்சியினையும் பாதிக்கக் கூடும் இளைஞர்கள் பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்களை கற்பதற்கும் சுதந்திரமாக இருக்கும்

இளம் பெண்களின் அரசியல் பங்கேற்பினால் இலங்கையில் பெண்களின் நிலையினை மேம்படுத்த முடியும் இலங்கை பெண்கள் அரசியல் தலைவர்களாக தோற்றம் பெற்றிருக்கிறார்கள். 1960இல் சிறிமாவோ பண்டாரநாயக்க உலக பெண் பிரதம மந்திரியாகவும் அவருடைய மகள் சந்திரிக்க பண்டாரநாயக்கா குமாரதுங்க இரண்டு தடைவை ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை பெண்கள் ஆசியாவில் அதியுயர் அரசியல் நிலையினைத் தக்க வைத்திருப்பதாக காணப்படுகின்ற போதிலும்

பாராளுமன்றத்திலும் உள்ளூராட்சி சபைகளிலும் ஆகக் குறைந்த மட்டத்திலிருப்பது முரண்பாடாக உள்ளது.

இளைஞர்கள் அரசியல் பங்கேற்பிற்கான தடைகள் மூன்று மட்ட அடைவுகளில் தோற்றுகின்றது

1. தனிப்பட்ட மட்டம்
2. நிறுவன மட்டம்
3. சுற்றாடல் மட்டம்

தனிப்பட்ட மட்ட தடைகளாக தொழிநுட்ப திறன் ஊக்கப்படுத்தல் தலைமை வகிக்கும் செயன்முறை பொருளாதார வளம் மற்றும் விழிப்புணர்வு அறிவு போன்ற குறைபாடுகளை உள்ளடக்கும் நிறுவன மட்டம் ஆனது தலைமை வகிக்கும் குழுக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகும்.

இலங்கையின் இறையாண்மை அரசியல் கட்டமைப்பின் ஊடாக மக்களிடம் கையளிக்கப்படுகின்றது அரசியல் வாழ்வில் மக்களின் ஈடுபாடு இல்லாமல் ஜனநாயகம் இருக்க முடியாது. முறைசார் அரசியலில் இளைஞரினை உள்வாங்கல் முக்கியமானதாகும். கோட்பாட்டளவில் கூட்டானதீர்மானம் எடுத்தலில் ஒவ்வொருவரும் சேர்க்கப்பட வேண்டும் ஆகையால் இச் செயன்முறையில் இளைஞர்கள் தவிர்க்கப்படலாகாது.

திருமதி. சகுந்தலா கேசவன்

ஆசிரியர்

காரைநகர் இந்துக்கல்லூரி



# இலங்கை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவை

இலங்கை பாடசாலை முறைமையில் ஆலோசனை சேவை வழங்கல் இரண்டு வகையாக மேற்கொள்ளப்படுகிறது

01-ஆரம்ப பாடசாலை மாணவருக்கானது

02-இடைநிலை பாடசாலை மாணவருக்கானது

ஆரம்ப பாடசாலை மாணவர்களை நோக்கும் போது ஒருபுறம் பெற்றோருடன் பாடசாலை ஆலோசகர் இடைவினையாற்ற வேண்டியுள்ளது. மறுபுறம் ஆரம்ப பாடசாலை பிள்ளைகளுடன் நேரடியான தொடர்பு கொண்டு விருத்திசார் பிரச்சினைகளை அவர்கள் மேற்கொள்ள உதவுவதற்கான தேவை.

இடை நிலைப் பாடசாலைகளை நோக்கும் போது 03 வகையாக பிரிக்க முடியும்.

01-விருத்தி சார் தேவை

02-தடுத்தல் சேவை

03-பிரச்சினைகளை சமாளிக்க உதவி செய்ய வேண்டிய தேவை

இலங்கையின் இடைநிலைப் பாடசாலை மாணவர்களை பொறுத்த வரையில் வெற்றி பெறும் தேவையும் கற்றல் செயற்பாடுகளைத் திருப்திகரமாக செய்ய வேண்டுமென்பதும் விருத்திசார் தேவைகளில் முக்கியமானதாக இருப்பதாக தென்படுகிறது. இடைநிலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையை பார்க்கும் போது பாடசாலை முறைமையினுள் ஆலோசனைப்பணி பெரும்பாலான மாணவர்களை பொறுத்தவரை கல்வி சார்ந்ததாக உள்ளமையை வலியுறுத்துகின்றது.

இடைநிலை பாடசாலை மாணவர்கள் அனுபவிக்கும் கற்றல் செயற்பாடு தொடர்பான பிரதான பிரச்சினைகள்

1. பாடத்தில் கவனம் செலுத்த முடியாமை
2. கற்றல் செயற்பாட்டில் ஆர்வம் குறைவு
3. பாடப்பிரிவை தெரிவு செய்வதில் கஷ்ரம்
4. வாசித்தல் எழுதுதல் கஷ்ரம்
5. பாடசாலைக்கு செல்ல சோம்பல் ஏற்படல்
6. பரீட்சை பதற்றம்

விருத்தி சார் தேவைகளை பொறுத்தளவில் கற்றல் சம்மந்தமான பிரச்சினைக்கு தீர்வு காண ஆலோசனை தேவைப்படுவதுடன் சக மாணவர்களுடனான இடைவினைக்கு தேவையான திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உதவி தேவைப்படுகின்றது.மாணவர்கள் தொழில் தேவை பற்றியும் உணர்வதாக தென்படுகிறது.


இடைநிலை பாடசாலை மட்டத்தில் பிரச்சினை தோன்றுவதை தடுப்பதும் பிரச்சினைகளை சமாளிக்க உதவி செய்வதும் கூட மாணவர்களது முக்கியமான தேவையாக உள்ளது. மாணவர்களின் கற்றல் சம்மந்தமான பிரச்சினை எழுவதை தடுத்தல், போதைப்பொருள் பாவனை புகைத்தல் போன்றவற்றைத்

தடுத்தல், ஒருவரது முதிர்ச்சியுடன் தோன்றுகின்ற பாலியல் ரீதியான மாற்றங்கள் குறித்த மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் மூலம் எதிர்பாலாருடனான தொடர்புகள் சம்மந்தமான பிரச்சினைகளை தடுத்தல் போன்றன யாவும் மாணவரில் பிரச்சினைகள் எழாது தடுத்தல் தேவைக்கு உதாரணமாக அமைதல், பொருத்தப்பாடு சம்மந்தமான பிரச்சினைகளாகிய பாடசாலை சூழலுடன் பொருத்தப்பாடு அடைய முடியாமை, சமூகத்தில் அதிக பயம், போதைப்பொருள் பாவனை போன்றவற்றை சமாளிப்பதற்கும் மாணவருக்கு ஆலோசனை தேவைப்படுகிறது.

விசேடமாக மாணவர்களது விருத்தி சார் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கும் பிரச்சினைகள் எழாது தடுப்பதற்கும் அவ்வாறு எழும்பும் பட்சத்தில் ஆரம்பத்திலே தலையிடுவதற்கும் சாதாரண மாணவன் அல்லது மாணவி என அழைக்கப்படுபவர்க்கும் அவர்கள் சாதாரணமாக பெறுவதை விட அதிக கவனிப்பு ஒரு ஆலோசகரால் வழங்கப்பட வேண்டும் என்பதை முழுமையான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் வலியுறுத்துகின்றன.

திருமதி சி.வாகீசன்
B.Sc.Dip.In.Edu
ஆசிரியர்.





# சிற்பிகள்

செதுக்கப்பட்ட சிற்பிகள்
சிலை வடிக்க
சிலைகளிலே கலை படைக்க
உயிர் கொடுக்கும் கலையோடு
புறப்பட்டோம்
விந்தைகள் செய்ய
உடல் திறன் வளர்த்திடும்
விளையாட்டில் கற்பனைகள்
நிறைத்துக் கொண்டோம்
இணைபாட செயல்
இருட்டுக்கு இணை இல்லை
நாளைய சூரியன்களை
நாம் படைப்போம்
வீண் பழி போக்கியே
மாறுபட்ட மனித
எண்ணங்கள் - நாம்
தகர்த்திடுவோம்
உண்மையும் நேர்மையும்
வாண்மை தீராமல்
ஆற்றுப்படுத்துவோம்
தீமைகள் ஒழிந்திட
உரிமைகள் மலரும்
யதார்த்தம் பேசினால்
விரோதிகள் ஆகிடுவோம்
நான் உத்தமனுமல்ல
உயிர்த் தியாகியுமல்ல
நம்மில் உத்தமர்கள்
எத்தனை பேர்?
வழி காட்டிடுவோம்
பார் உலகில்
சிலை வடிக்கும் கற்கள்
எம் கையில்

பண்டையூர் ஐ.வி தாஸ்
இ.அன்ரன் விமலதாஸ்
உடற்கல்வி ஆசிரியர்
காரைநகர் இந்துக்கல்லூரி

# மீண்டும் பெற முடியாத சொத்து

இடிந்தவற்றை எல்லாம் திரும்ப பெறலாம். நம்மை விட்டு செல்வம் விலகுமானால், மறுபடியும் செல்வத்தை முயன்று பெற முடியும். மனைவி போனால் கூட இப்போது மறுமணம் செய்ய முடியும். குழந்தையே போனாலும் இன்னொரு குழந்தையை இறைவன் தருவான். இவ்வாறாக இந்த உலகத்தில் எல்லாவற்றையும் ஒருவாறாக மனிதன் ஒருவனால் பெற்றுவிட முடியும்.

ஆனால் எப்போதுமே திரும்ப பெற முடியாதது எது தெரியுமா? அது தான் “நேரம்” ஆம் இந்த நேரத்தை யாராலும் திரும்ப பெறமுடியாது 2015 பெப்ரவரி 26 இனி வராது சென்றது சென்றதுதான்ஆகவே விலை மதிக்க முடியாத காலத்தை இறைவன் நமக்கு தருகிறான். காலத்தை வீணாக்கலாமா? மார்பிலே பூசிக்கொள்ள வேண்டிய சந்தனத்தை வயலில் இறைக்கலாமா நிச்சயமாக இறைக்க முடியாது.

மைசூர் மன்னர் பெருமான் மைசூரில் தங்கமும் விளைகிறது. சந்தனமும் விளைகிறது. மன்னர் பெருமான் தனக்கு சொந்தமான சந்தனக்காட்டை பார்வையிட்டுவிட்டு குதிரை மேல் திரும்பி வந்து கொண்டிருந்தார். ஏதிரில் ஒரு எண்பது வயது கிழவன் விறகு சுமந்து வந்துகொண்டிருந்தார். மன்னவர் அந்த கிழவனைப்பார்த்து “அப்பா! உமக்கு மக்கள் ஒருவரும் இல்லையா?” என்று கோட்டார்.

கிழவன் விறகுக் கட்டையை கீழே வைத்து விட்டு மன்னர் காலில் விழுந்து வணங்கி “ நாலு பிள்ளையை பெத்தேன் படிக்க வைத்தேன் வேலையும் வாங்கி கொடுத்தேன். தனித்தனியாய் போயிட்டாங்கள். என்னையும் மனைவியையும் அடிச்சு எழுத படிக்க தெரியாது என்று விரட்டிட்டாங்க. எனக்கு எழுத தெரியாது படிக்க தெரியாது விறகு விற்று பிழைக்கிறேன்.”என்றான்

“அப்பா! இந்த விநாடியோடு உம் வறுமை விலகட்டும். இந்தப் பெரிய வாளாவிய சந்தன மரம் நிற்கின்றது. அங்கே ஒரு சந்தன மரம். அந்த பக்கம் ஒரு சந்தன மரம் இந்தப்பக்கம் ஒரு சந்தன மரம். இந்த நாலு சந்தன மரங்களுக்கு இடையில் உள்ள அத்தனை சந்தன மரங்களும் உனக்கு சொந்தம் பெரிய விசித்திரமான சந்தன கட்டையை எடுத்துக்கொள் சௌக்கியமாய் இரு.” என்று சொல்லி விட்டு ஒரு ஏழையை வாழ வைத்தோம் என்ற மகிழ்ச்சியோடு மன்னர் அரண்மனை போய் விட்டார். அந்த ஏழை வீடு வாங்குவான் மெத்தை வாங்குவான் பஞ்சனை வாங்குவான் பாலும் தயிரும் தேனுமாக சாப்பிடுவான். கிழவன் சாகும் தருவாயில் சந்தோஷமாக வாழ்வான் என்று மகாராஜா திருப்தியடைந்தார்.


ஆறு மாதம் கழித்து ராஜா அன்று வந்தது போலவே வந்த போது கிழவன் ஒரு கோணிப்பை மூட்டையை தலையில் சுமந்து கொண்டு எதிரில் வந்தான். விறகு சுமந்தான் இன்று கோணிப்பை சுமக்கிறான். ராஜாவிற்கு ஒன்றும் புரியவில்லை “லட்ச லட்சமாய் பெறக்கூடிய சந்தன கட்டையை கொடுத்தேனே இவன் உயர்ந்த நிலையில் வாழ வேண்டுமே” என்று எண்ணி கிழவனை “பெரியவரே” என்று அழைத்தார். கிழவன் இவரை பார்த்தவுடன் “ஆ!” மகாராஜா! வாழ வைக்கும் தெய்வமே வணக்கம் வணக்கம் என்றார். பின்னர் விபரம் கேட்க “நீங்க குடுத்தீங்களே மரம்” அது வித்தா எட்ட்ன்னா. சுட்டு வித்தா ஐந்துரூபா பெறும். அத்தன மரங்களையும் வெட்டி வெட்டி சுட்டு சுட்டு விக்கிறேன். என்றான் கிழவன். கொடுத்தவனக்கு எப்படி இருக்கும்? ஐயோ! பாவி உனக்கு போய் சந்தன மரம் கொடுத்தேனே! நானல்லவா பைத்தியக்காரன்” என்று வருந்தி பெரியவரே எல்லா மரங்களையும் வெட்டி சுட்டாகி விட்டதா? ஏன்று மன்னன் கேட்டான். இல்லை இன்னும் மூன்று மரம் பாக்கி இருக்கிறது என்றான் கிழவன்.

மன்னன் அப்பா சந்தன மரத்தை வெட்டி சுட்டுக் கரியாக்கி விற்பதா? யார் சொன்னார்கள் மரமாக விற்றால் நீ பெரும் பயனை பெறுவாயே மீதி மரங்கள்ளயாவது வைத்து பிழைத்துக்கொள் என்று சொல்லி அரண்மனை திரும்பினான். அந்த கிழவன் சந்தன மரத்தை வெட்டி சுட்டு வீணாக்கியதை போல் நாம் வாழ்நாளை வீணாக்குகின்றோம். ஆம் சந்தன மரத்தை விட பெறுமதியான ஒன்று எமது கைகளிலே இலவசமாக தவழ்கின்றது. அதை விடுத்து நாம் பொழுதுபோக்கு நவீனத்துவம் என்றெல்லாம் வழி தவறி இழக்கக் கூடாத சொத்தாகிய காலத்தை வீணாக்கி கொள்கின்றோம். கல்வி என்ற பெரும் சொத்து நம் கண் எதிரே இருப்பது பள்ளிப் பராயத்திலே யாவருக்கும் புரிவதில்லை காலம் கடந்துதான் தேடுகிறார்கள் தேடும் போது கிடைப்பதில்லை காலம் போனால் போனதுதான்.

“காற்றுள்ள போதே தூற்றிக் கொள்”

விம்சியா யோகராஜா
ஆசிரியர்
காரைநகர் இந்துக்கல்லூரி

# அண்ணல் எங்கே?



அண்ணல் கொடுத்த அகிம்சை
இன்று நம்மிடையே இல்லை
அக்டோபர் 2ம் தேதி காந்தி
பிறந்த நாள் கொண்டாடும்
அன்று நம் நினைவில்
காந்தி வாயளவில்
காந்தீயம் பேசும்
காரியவாதிகளின் மத்தியில்
காணாமற் போனது
காந்தி மட்டுமல்ல
காந்தீயமும் தான்
போர்ப்பந்தரில்
பிறந்து போர்க்
கொடியெடுக்கத் தடை
விதித்த தாத்தா நமக்கு
அளித்ததோ - அகிம்சை இன்று
மடை திறந்த வெள்ளமாய்
தலைவிரித்தாடுவது - இம்சை
அன்று கத்தியும் ரத்தமும்
இன்றி சுதந்திரப்போர்
வெள்ளையனை எதிர்த்து
இன்றோ கத்தியும்
ரத்தமும் களிநடம் போடுகிறது
சாதி வெறி மதவெறியெனப் போர்வையுடுத்து
நம் மத்தியில் சிக்குண்டு
சீரழிந்ததோ மனித நேயம்
உறங்கியது போதும் விரித்தெழு இந்தியனே
அகிம்சையின் விதை மீண்டும் விதைப்போம்
பிஞ்சுகளின் நெஞ்சங்களில் -வளர்ப்போம்
காந்தியின் கருணை உள்ளங்களை என்று
உறுதியெடுப்போம் உண்மை உணர்த்தியவனின்
பிறந்த நாளில் - அதுதான் நாம்
மறைந்த அண்ணலுக்குச் செலுத்தும்
மனமார்ந்த நன்றிக்கடன்



சு.டிலக்சனா
2017 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி



# SRI LANKA

Sri Lanka is a beautiful country in the Indian Ocean. It is the Only Country Which has hot cold climates at the same time of the year in different areas.

Colombo, the Capital of Sri Lanka is hot and Five hours drive From Nuwara Eliya. is cold throughout the Year. Because of this cold climate and the national beauty, tourists are attracted to our country. Sri Lanka is proud of its enormous mountains and rivers.

Because of the massive rivers Sri Lanka is self-sufficient in electricity. In the hill country there are water Falls and some of them are utilized for the generation of them are waterfalls and some of them are utilized for the generation of Hydro-electric power the present government has commenced several projects including the accelerated Mahaweli Programme, and the free tradezone,established under the Governments open market policy. The one Indian housing programme has been lunched by the prime minister in a bid to solve the housing problem for the homeless.

The main source of foreign exchange is tea, rubber and coconut.srilanka is rich in gems and spices. Gem too has become a foreign exchange earner in resend times. Our gems fetch a very good price in the world market.

Srilanka can be proud of its beaches and its tourist attraction. Tourism has become a source of foreign exchange. Luxury hotels have sprung up recently in all parts of the island to cater to the fast increasing tourists.

It has got one of the best natural Harbors in the world this port of trincomalee was once used as a naval base for the British Empire. Also it has one of the best zoological gardens in south Asia.

The hill capital Kandy is a beautiful town with the Dhalada maligawa and the lake. The month of august is the festival season. Kandy perahera is a Colorful sight to watch. People from all over Sri Lanka and tourists gather in Kandy to see the pageant.

Nuwara Eliya is forty eight miles from Colombo. During the April season people from Colombo and other parts, mainly the rich, go to Nuwara Eliya for a holiday. Various activities are organized during this season, like flower show, horse racing, motor racing, and tennis tournaments. April is the hottest season in Nuwara Eliya and in the island.

Jaffna is in the northern part of Sri Lanka. It is proud of its Hindu culture and many Hindu temples are found here.

The Sinhalese are the majority in Sri Lanka. There are four major Nationa-lities namely budhists,hindus,muslims and Christians.

Our harbor in Colombo is of International fame and ships from all over the world call over here.

Sri Lanka is known as the pearl of the Indian Ocean. I am really proud to be born a Sri Lankan.

K. Lavanya
2017 tech
Karainagar hindu college



# எம் பள்ளி காலங்களில்............

என் கடந்த கால பள்ளி நினைவுகளை என் நண்பர்களிற்கும், சகோதர சகோதரிகளிற்கும்,தம்பி தங்கைகளிற்கும் நான் பள்ளியை விட்டுப் பிரியும் சோகமான நாட்களை நினைத்த படி என் உள்ளங்களில் தோன்றும் குமுறல்களை உங்களுடன் பகிருகின்றேன்.

2003ம் ஆண்டு எமது முன்பள்ளி படிப்புக்களை எல்லாம் முடித்து விட்டு முதலாம் வகுப்பில் அம்மாவின் முந்தானையைப் பிடித்த வண்ணம் பாடசாலையில் வந்து சேர்ந்தேன். எல்லோரும் புதிய முகம் என்னைப் போலவே எல்லோரும் இருந்தனர். பாடசாலை வந்து சேரும் போது கண்களில் கண்ணீருடன் வந்த நாட்கள் இன்றும் நெஞ்சில் நிற்க, சில காலம் செல்ல எல்லோருடனும் பழகி பாடசாலைக் காலத்துக்கு பழக்கப்பட்டோம். 1ம்,2ம், வகுப்பில் 4 பாடங்களும், விளையாட்டும், ஓட்டமுமாக காலம் கடந்தது. எம்மை 3ம் வகுப்பிற்கு கூட்டிச் சென்றது. 3ம் வகுப்பில் எல்லோருக்கும் பிடித்த புதிய பாட அறிமுகத்துடன் 4ம் வகுப்பும் வர நமக்கு புலமை பரீட்சை வகுப்பும் தொடங்கியது. 5ம் வகுப்பில் 1வது போட்டிப் பரீட்சையும் எழுதி முடித்து மனதில் பயத்துடனும், அம்மா, அப்பாவின் அடிக்கு பயந்தும் பரீட்சை முடிவுக்கு காத்திருந்தோம். பரீட்சை முடிவுகள் வந்து, பேச்சுக்கள் எல்லாம் வாங்கி முடித்து நம் குழந்தைப்பருவமும் முடிய நாம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தோம்.

## இப்போது நாங்கள் 6ம் வகுப்பில் ...,

முதல் நாள் பாடசாலை அம்மாவிற்கு பின்னால் வந்து நிற்க எங்களை ஒவ்வொரு வகுப்பில் பிரித்து விட்டார்கள். பெரிய இடம் ,அதிக பிள்ளைகள், ஆசிரியர்கள், பெரிய பல கட்டடம் எல்லாம் புதிதாகவும் மனதில் பயமாகவும் இருந்தது. இது வரை 5 பாடம் படித்த எங்களுக்கு 12 பாடம் 8 பாடவேளை என்றவுடன் அடுத்த பயம் கண்களில் கண்ணீர் என்று தொடங்கிய எமது இப் பாடசாலை முதல் வருட படிப்பு இன்பமாக சென்றது. பாடசாலை நடைமுறை பழக்கப்பட நண்பர்கள் உருவாக இடங்கள் பழக்கப்பட எங்களில் சேட்டைகள் அதிகரித்த படியும் நாங்கள் தரம் 8 இல் மட்டும் அந்த வகுப்பில் நாங்கள் செய்த சேட்டைகள் குறும்புகள் எங்கள் வகுப்பை குழப்படியான வகுப்பாகவே மாற்றிவிட்டது. அன்று தான் பெயர் எடுத்தோம் குழப்படி வகுப்பு என இன்னும் மாறவில்லை. எங்களை விட்டு இந்த பெயர். ஆனாலும் ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலையை விட்டு பிரியும் போதும் எங்கள் வகுப்புக்கு வந்து அழாமல் செல்லும் ஆசிரியர்களும் இல்லை (உங்களை விட்டு பிரிகின்றோம் என்று) இவ்வாறே தரம் 8ம் முடிந்ததும். தரம் 9இல் கால் பதித்து மாகாணமட்ட பரீட்சையையும் எழுதி நல்ல பெறுபேறுகளை பெற்று உயர்தர மாணவர்களானோம்.

## இப்போது நாங்கள் தரம் 10 இல்............

அடுத்த போட்டிப் பரீட்சை என்ற பயம் வந்தது. என்றாலும் படிக்கும் ஆர்வம் எங்களிடம் வரவில்லை. இருந்தாலும் o/l பரீட்சை என்ற எண்ணத்துடன் 11ம் வகுப்பில் கால் பதித்தோம் காலம் சென்றது. தெரியாமல் இப்போது o/l பரீட்சை மண்டபத்தில் இருக்கிறோம். பரீட்சைகளையும் எழுதி முடித்து விட்டு எமது பாடசாலை வாழ்வில் முதலாவது பிரிவுடன் எல்லோரும் சோகத்துடன் வீடு சென்ற நாட்களும் நினைவில் வருகின்றது. இதைவிட எங்கள் கணித பாட ஆசான் விஜயகுமார் ஆசான் என்றும் விடுவிக்கப்பட முடியாதவர். நம் பள்ளிக்காலத்திலிருந்து சில காலத்தில் பரீட்சை முடிவும் வந்தது. உயர் சித்தி 6Aயும், கணித பாடத்தில் 4பேர் Aயும் எடுத்து, முதல் முறையாக கூடிய வீதம் சித்தி பெற்று உயர்தர வகுப்பிற்கும் தெரிவானோம்.

இப்போது நாங்கள் பாடசாலை நிறைவு கட்டத்தில் உயர் தரத்துக்காக பாடசாலையில் ஒன்று கூடிய நாட்கள் மறக்க முடியவில்லை. இதுவரை ஒன்றாக படித்த நாம் இப்போது ஒவ்வொரு துறையிலும் பிரிந்து நம் எதிர் கால இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். எம்மால் மறக்க முடியாத நல்ல ஆசிரியர்களையும் இழந்த வண்ணம் பாடசாலையில் உயர்தர மாணவர்கள் என்ற எண்ணத்துடன் காலங்களும் சென்று கொண்டு செல்ல நாம் இப்போது உயர்தர முடிவில் வந்து பரீட்சைக்காக இருக்கிறோம்.........

இன்று தான் பாடசாலை அம்மாவுடன் வந்த முதல் நாள் போல இருக்கிறது. ஆனால் நாளை நாம் பிரிந்து எம் பள்ளியையும், நண்பர்களையும் விட்டு விலகப் போகிறோம். என்று மனதில் நினைக்கும் போதே எல்லோர் கண்களில் இருந்தும் கண்ணீர் நீர் ஊற்றாய் ஓடுகிறது.

நாம் பாடசாலையில் செய்யாதவை என்ன இருக்கிறது. மோசமான வகுப்பு என பெயர் எடுத்தாலும் எல்லோருக்கும் பிடித்த வகுப்பாகவும் நாங்களே பெயர் எடுத்திருக்கிறோம். பாடசாலையில் விளையாட்டுத்துறையாக இருந்தாலும், படிபடபாக இருந்தாலும், மேடை நாடகமாக இருந்தாலும்,பட்டிமன்ற பேச்சாளர்களாக இருந்தாலும், பான்ட்,சென்ஜோன்ஸ், சாரணர் அணியாக இருந்தாலும், வன்பொருள்,மென்பொருள் அணியானாலும், நாட்டியம்,சங்கீதம், சித்திர துறையாக இருந்தாலும், அறிவிப்பாளர்களாக இருந்தாலும்,சதுரங்க வீரர்களானாலும்,ஒரு நிகழ்வை சிறப்பாக செய்பவர்களாக இருந்தாலும் எல்லாவற்றிலும் எமது வகுப்புக்கு இணையாக இருந்தவர் எவரும் இல்லை.

ஆனால் இன்று நாம் பாடசாலைக் காலத்தை இழக்கிறோமா? இல்லை பாடசாலை எம்மை இழக்கிறதா? என்று தெரியவில்லை. இன்னும் சில நாட்களில் பரீட்சை எழுத இருக்கிறோம். நல்ல பெறுபேற்றை பாடசாலைக்கு பெற்றுக் கொடுப்போம் என்ற எண்ணத்துடன் இப்போது நாம் பிரிந்தாலும் என்றும் நம் நட்புணர்வு பிரியாமல் ஒன்றாய் மீண்டும் வருவோம் நம் பள்ளியின் பழைய மாணவர்களாக...............................

"என்றும் பிரியாது நம் நட்பு அலைகள்"

காலத்தை இழந்த நண்பர்கள் மனதில் இருந்தவை

தே. ரோமிலா

2016 கலை

காரைநகர் இந்துக் கல்லூரி

# பிரியமான நண்பர்கள்



அன்பென்ற ஊற்றை
நெஞ்சுக்குள் பாய வைத்தவர்கள்
நட்பென்றால் என்ன
எனச் சொல்லி நின்றவர்கள்
அன்பு வலை வீசி
சிக்க வைத்தவர்கள்
பள்ளி வாழ்வில் கிடைத்த
அருமையான தோழர்கள்
அன்புக்கு தாயாகவும்
துன்பத்தில் சகோதரனாகவும்
அறிவுக்கு ஆசானாகவும்
பண்புக்கு வழிகாட்டியாகவும்
திகழ்ந்த பாசமான தோழர்கள்

சிறு சிறு சண்டைகள் சில நாள் கோபம்
எங்கே அடிக்கடி சண்டைகள்
ஏற்படுகிறதோ அங்கே அன்பு அதிகரிக்கும்
என எழுதிய திருமுகம் சண்டையை ஒரு நொடியில்
மறந்து உறவாடும் இதயம்
சிறு நாழிகை கோபங்கள் மீண்டும் அதை மறந்து
பழைய உறவு முறை கொண்டாடும் நேரம்
அதிகாலையில் Good Morning குடன்
ஆரம்பிக்கும் தொடர்பு மற்றவர்கள் அறியா மரபு
இதை கேட்டு மகிழும் உள்ளங்கள்
பாடசாலை வாழ்கை
வாழ்வில் ஒரு முறை வரும்
வசந்த காலம் அவ் வசந்தத்தை வாடாது
செழிக்க செய்யும் நம் நண்பர் கூட்டம்
என்றும் நம் நட்பு நிலைக்க
இறைவனிடம் பிரார்த்திக்கும் மனசு
காற்றோடும் கவி பாடி
கற்பனை சிறகு விரியும்
நட்புக் கூட்டம் சேர்ந்து
உருவாக்கும் புதிய வழி
என்னுள் நிறைந்து நிற்கும்
பிரியமான நண்பர்கள்

யோ.யுசிதா
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி

# இலங்கை மத்திய வங்கி பற்றிய ஓர் கண்ணோட்டம்



- ✧ இலங்கையில் நிதித் துறையில் அதி உச்ச நிறுவனமாக இது உள்ளது.
- ✧ பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு நிதியில் முறையில் உறுதிப்பாடு என்னும் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்படும் அமைப்பு இலங்கை மத்திய வங்கி ஆகும்.
- ✧ இது 1949ம் ஆண்டு 58ம் இலக்க நாணய விதி சட்டத்திற்கு அமைய (பணவியல் சட்டத்திற்கு அமைய) 1950ல் நிறுவப்பட்டது.
- ✧ இதன் முதலாவது ஆளுநர் ஜோன்எஸ்டர் ஆவார்.
- ✧ இதன் தற்போதைய ஆளுநர் அர்ச்சுன மகேந்திரன்.
- ✧ மத்திய வங்கியின் தொலைநோக்கு 'இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கு பதிவளித்தல்' ஆகும்.
- ✧ இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள் அல்லது நோக்கம்
  1. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை பேணுதல்.
  2. நிதியில் முறையில் உறுதிப்பாட்டை பேணுதல்.
- ✧ மத்திய வங்கியின் தற்போதைய நோக்கங்களை வடிவமைத்த சட்டம் 2002ம் ஆண்டு நாணய விதி திருத்தச் சட்டம் ஆகும்.
- ✧ பணவீக்கத்தை குறைப்பதற்கான மத்திய வங்கியின் கொள்கை நாணயக் கொள்கை ஆகும்.
- ✧ இலங்கை மத்திய வங்கீ அரச கூட்டுத்தாபன வகையைச் சார்ந்தது ஆகும்.
- ✧ அரசின் வங்கியாக தொழிற்படும் அமைப்பு இலங்கை மத்திய வங்கி ஆகும்.
- ✧ மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் ஆவன
  1. நாணய கொள்கையை அமுல் படுத்தல்
  2. செலவாணி கொள்கையை மேற்கொள்ளல்
  3. நாணயத்தை வெளியிடுதல்
  4. இலங்கையின் அலுவல்சார் ஒதுக்குகளை முகாமை செய்தல்
- ✧ மத்திய வங்கி வங்கிகளின் வங்கியாக தொழிற்படும் வழிகள் ஆவன.
  1. வங்கிகளுக்கு அனுமதி வழங்கல்
  2. வங்கிகளுக்கு இறுதிக் கடன் வழங்குவோனாகத் தொழிற்படல்
  3. வங்கிக்கடன் கடன்களை கட்டுப்படுத்தல்
  4. வங்கிகளின் விசேட செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கல்
- ✧ நாட்டின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு ,நிதியியல் முறையின் உறுதிப்பாடு என்பவற்றுக்கு பொறுப்பாக மத்திய வங்கி காணப்படுவதால் அரசின் வங்கியாக மத்திய வங்கி காணப்படுகின்றது.
- ✧ வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து வெற்றிக்கு அனுமதி பெற வேண்டும்.
  1. வர்த்தக வங்கிகளை புதிதாக நிறுவுவதற்கு
  2. வர்த்தக வங்கிக் கிளை ஒன்றை நிறுவுவதற்கு
  3. ATM பொறியை நிறுவுவதற்கு
  4. புதிய வைப்புத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு

வி. பத்மினி
2017 வர்த்தகம்
காரைநகர் இந்துக் கல்லூரி

# கல்லூரி நாட்கள்



அன்று நாம் நினைத்திருக்க மாட்டோம்
கல்லூரிக்குள் நுழைந்த
முதல் நாள்
நமக்கு இருந்த பயமும் தயக்கமும்
இன்று கடைசிநாள் பிரிவில் கண்ணீரும்
ஏக்கமுமாய் மாறும் என்று

அன்று தொடங்கி இன்று வரை
தொடர்ந்த நம் கல்லூரி பயணம்
மனங்களில் விட்டு சென்றுள்ளது
பல பசுமையான நினைவுகளையும்
சில மறக்க முடியாத ரணங்களையும்

சில குறும்பான காரணங்களாலும்-காரணமே
இல்லாமல் வைத்த செல்ல பெயர்களாலும்
நம் நிஜப் பெயர்களை மறந்தே போனோம்
இனி யாருமில்லை அப் பெயர்களை சொல்லி அழைக்க

காலையிலே திறக்கப்பட்டு
இடைவேளைக்குள் காலி செய்யப்படும்
நம் உணவுகள்- எனினும்
நாம் உண்டதில்லை எம் உணவுகளை மட்டும்
இதுவரை கண்டதில்லை இது போல் ஒரு சுகம்

ஒவ்வொரு தவணை பரீட்சையிலும்
முடிவு செய்வோம்
அடுத்த தவணை பரீட்சைக்கு
முதலில் இருந்து படிக்க ஆரம்பிக்க
வேண்டும் என்று
இதோ வந்து விட்டது கல்லூரியின் இறுதி நாள்
படித்து முடித்து விட்டோம். கல்லூரியின் தயவால்

இனி இருக்கப் போவதில்லை
கடைசி இருக்கை அரட்டைகளும் - வெள்ளிக்கிழமை
பிராத்தனையில் நாம் செய்த குறும்புகளும்
சில்லறை மட்டும் வைத்துக்கொண்டு
கேன்டீன் செல்வதும்
இன்னும் பட்டியலுக்குள் அடங்காத பலவும்
இது நிரந்தர பிரிவு இல்லை
எல்லோரும் தொடர்பில் தான் இருக்க போகிறோம்
என ஒருவரை ஒருவர் தேற்றினாலும்
தவிர்க்க முடியவில்லை
விழிகளின் ஓரத்தில் கண்ணீர்த்துளிகளை

க.சரண்சியா
2017 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி

# மனித உடலின் ஆச்சரியம்



- மனித உடலில் காணப்படும் தசைகளின் எண்ணிக்கை 639.
- மனித மூளையில் மொத்தம் 1200 கோடி நரம்பு செல்கள் உள்ளன.
- உடலின் மெல்லிய சருமம் கண் இமை.
- மனிதனின் கண் நிமிடத்துக்கு 25 முறை மூடித்திறக்கிறது.
- மனித மூளையின் நிறை 1.4kg.
- உடலின் மிகப்பெரிய பகுதியாக விளங்குவது தோல் பகுதியாகும்.
- நமது கால் பாதங்களில் 250,000 வியர்வை சுரப்பிகள் உள்ளன.
- மனித உடலில் கெட்டியான பகுதி பற்களில் உள்ள அனாமல்.
- மனிதனின் முதுகுத்தண்டின் எலும்புகள் 33.
- மனிதன் இறந்து மூன்று நிமிடம் கழித்து மூளையின் குருதி ஓட்டம் நின்று விடுகின்றது.
- ஒரு மனித உடலில் கிடைக்கும் கொழுப்பிலிருந்து 10 சோப்புக் கட்டிகள் தயாரிக்கலாம்.
- நமக்கு நாள் தோறும் 16 kg காற்று சுவாசிக்கத் தேவைப்படுகிறது.
- நமது தசைகள் உண்டாக்கும் வெப்பம் ஒரு லீற்றர் நீரை ஒரு மணி நேரம் கொதிக்க வைக்கப் போதுமானது.
- நாம் வாழ்நாளில் சராசரியாக சாப்பிடும் உணவின் மொத்த அளவு - 30 000kg.
- மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.
- 900 பென்சில்களை தயாரிக்கும் அளவுக்கு மனித உடலில் கார்பன் சத்து உள்ளது.
- மனித உடலில் மிகவும் பலமானது விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது. இது காண்டாமிருகத்தின் கொம்புகளில் காணப்படுவது, சாவுக்கு பின்னரும் கூட நகத்துக்கு ஒன்றுமே ஆகாது.
- நமது உடலில் உள்ள ஈரல் 500 வகையான வேலைகளை செய்கிறது.
- நமது உடல் நிறையில் 9 சதவிகிதம் குருதியில் ஆனது.
- நாம் குள்ளமாக இருப்பதற்கு காரணம் பிட்யூட்டரி சுரப்பி குறைவாக இருப்பது.

பா.பிரசாந்
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி

## தாயன்பு



ஈரைந்து மாதம் கருவறையில்
என்னைச் சுமந்தாய்
ஈன்றெடுத்த பின்னும்
கண் விழித்து எனைக் காத்தாய்

உதிரத்தைப் பாலாக்கி -என்
உடலுக்கு ஊட்டம் தந்தாய்
நிலாச்சோறு நீயூட்ட உன்
நிலாமுகம் பார்த்து நான்
உணவு உண்டேன்

என் பிஞ்சு விரல் நீ பிடிக்க
உன் தயவில் நான் நடை பயின்றேன்
பள்ளிப் பருவம் வந்ததும்
படாத கஷ்டமெல்லாம் -பட்டு
என்னைப் படிக்க வைத்தாய்

பரீட்சை நெருங்கி வந்ததும் -உன்
பசி தூக்கம் தனை மறந்து
என்னுடன் துணை இருந்து
ஏற்றம் பெற வரமளித்தாய்
இன்னுமோர் ஜென்மம் இருப்பின்
உன் கருவில் மீண்டும் உருவாகி
உன் மடியில் தவழ்ந்திட
வரமொன்று தருவாயோ
என் தாயே!

செல்வி பா. குலமதி
2018 உயிரியல்
காரைநகர் இந்துக்கல்லூரி

## வாழ்வில் முன்னேற வைர வரிகள்

- முடியும் என்பது தன்னம்பிக்கை. முடியாது என்பது மூடத்தனம். முடியுமா என்பது அவநம்பிக்கை.
- நம்பிக்கை என்பது விழித்துள்ள மனிதனின் கனவு.
- சிந்தனையற்ற செயல் குருட்டுத்தனமானது செயலற்ற சிந்தனை வெறுமையானது.
- கவலைப்படுவது காலத்தை வீணடிக்கிறது. நம்பிக்கையே நன்மையைத் தருகிறது.
- வாய்ப்புத் தானாக வருவதில்லை. மனிதனே அதை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.
- மதங்கள் இறைவனை அடைவதற்கான வழிகள் மட்டுமே.
- சூடான சிந்தனையை விட இதமான அன்பே இன்றைய தேவை.
- எதனைப் பேசுகின்றோம் என்பதை விட எதைப் பேசக்கூடாது என்பதில் கருத்தாயிரு.

ஸ்ரீ.சாரங்கன்
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி.



# விடா முயற்சி வெற்றி தரும்

நாம் நமது வாழ்கையை வாழ்ந்து முடிக்கும் போது ஏதோ ஒரு சாதனையை இவ் உலகிலே தடம்பதிக்க வைக்க வேண்டும். பிறந்தோம், வாழ்ந்தோம், சாவோம் என்று இருக்கக் கூடாது. வாழ்கின்ற காலத்திலே உலகில் உள்ள மக்கள் எல்லோரையும் நம்மை திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும். அதற்கு மாறாக சும்மா வெட்டியா, சோம்பேறியா இருந்தால் வீதியில் செல்கின்றவர்கள் எல்லோரும் எம்மை அவமானப் படுத்தி விட்டுச் செல்வார்கள். அதற்காக நாம் விடா முயற்சியுடன் நம் இலட்சியத்தை நோக்கி பயணிக்க வேண்டும்.

இலட்சியம் என்பது நம் நீண்டநாள் கனவாக இருக்கும் அதனை இலகுவில் அடைய முடியாது அதனை அடைவதற்கு உறுதியான மனநிலையும், திடமான உடம்பும், சாதகமான சிந்தனைகளும், முயற்சி, விடாமுயற்சி என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும். நம் இலட்சியம் தான் நம்மை மேலும் மேலும் முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

விடாமுயற்சியின் மூலம் நாம் எதை வேண்டுமானாலும் சாதித்து விட முடியும். விடா முயற்சியின் மூலம் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. விடா முயற்சி செய்தும் அது நமக்கு பயனளிக்கவில்லை என்று பலர் கூறுவர். அது அவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றுவதாக கூறும் காரணமாகும். ஒரு சிலந்தி தம் இருப்பிடமான சிலந்தி வலை கட்டுவதற்கு நினைக்கிறது அது முதலில் முயற்சி செய்தது அது பயனளிக்கவில்லை என்றாலும் அது மனம் சளராமல் கடின உழைப்பின் மூலம் மீண்டும் முயற்சி செய்தது அது பயனளித்தது ஒரு சிலந்தியே விடா முயற்சியின் மூலம் தான்நினைத்ததை அடைய முடியுமானால் ஆறறிவு படைத்த மனிதனால் சாதிக்க முடியாத காரியமாக எதுவும் இல்லை.

சிலர் தோல்வியைக் கண்டு துவண்டு விடுவார் தோல்வியைப் பற்றி சிந்திக்காமல் இருந்தாமல் இருந்து வெற்றி பெறுவது என்று சிந்திப்பதன் மூலம் நாம் வெற்றி அடையலாம்.

"விடா முயற்சி வெற்றி தரும்"

கே.யசிதரன்
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்துக்கல்லூரி

# கல்லூரி நினைவுகள்



கல்லூரித் தாயின் கருவறையில்
பிறந்த நாம் ஆண்டுகள் பல
ஆயத்தமானோம்
வாழ்க்கையை எதிர் கொள்ள

பார்த்துப் பழகிய நினைவுகளை
மனதில் பதித்து பாதிப் பலத்தை
மறந்தோம் நண்பனின் முகம் காண
நாளும் வருவோம் கல்லூரிக்கு

தூரத்தில் இருந்தாலும்
துக்கத்தில் இருந்தாலும்
நம் நட்புக் குறைவதில்லை
கஷ்ர காலத்தில் தோள் கொடுத்த தோழா
இன்று பிரிவெனும் துயரை நீ கொடுக்கின்றாய்

ஒவ்வொரு நொடியும் இனிதாய் கழிந்ததே
இனி எப்படிக் கழிப்பேன் காலங்களை
கனவுகளோடு வாழ்ந்தோம்
கல்லூரிக் கல்வியோடு
நட்பு என்னும் நல்ல பாடத்தை நன்கு கற்றோம்

தோல்வியின் இறுதிப்படியே
உன் வாழ்வின் முதற்படி
பிரிவு என்னும் முற்றுப் புள்ளியை அகற்றி
நட்பு என்னும் தொடக்கப் புள்ளியை
உருவாக்குவோம் தோழா

பிரிவு என்பது புதிதல்ல
பிரிவுகள் தான் புதியவை
நேற்று வந்தோம் கனவுகளோடு
இன்று இருப்போம் புன்னகையோடு
நாளை மலர்வோம் நினைவுகளோடு


கு.சுதர்சனா
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி

# ஆபத்தானது குளிர் பானம்



ஷோப்பிங், சினிமா, மால்கள், சுற்றுலா, பார்ட்டிகள், விழாக்கள் என எங்கு போனாலும் குளிர்பானங்கள் பருகுவதை பலரும் வாடிக்கையாக கொண்டிருக்கின்றனர். மதுவகை அல்லாத பானம் என்பதாலேயே soft drinks என்று குளிர்பானத்தை சொல்கின்றார்கள். ஆனால் மதுபானங்களை விட ஆபத்துக் கொண்டவை இந்த குளிர்பானங்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? நம் உடலின் ஆரோக்கியத்துக்கும் இயக்கத்திற்கும் தேவையில்லாத ஓர் உணவுப்பெருள் இந்த குளிர்பானங்கள், Nutritive Value என்று எந்த சத்துப் பொருட்களும் இதில் இல்லை. தேவையற்ற கலப்படங்கள்தான் நிறைந்திருக்கின்றன. ஒரு நாளில் 03 டிஸ்பூணுக்கு மேல் சீனியை சேர்த்துக்கெள்ள கூடாது.

ஒரு குளிர்பான போத்தலில் மட்டுமே 07 டிஸ்பூன் வரை சீனி இருக்கிறது. காபனேட்டட் டிரிங்ஸ், எரியேட்டட் டிரிங்ஸ் என்று சொல்லும் அளவிற்கு குளிர்பானங்களில் அடங்கியிருக்கும் வாயுவின் அளவு அதிகம். இந்த கார்பனேட்டு வாயுதான் செறிமானம் ஆனது போன்ற மாயத்தோற்றத்தை உண்டாக்குகிறது. குடலின் ஒரு பகுதியில் நகர்ந்து வேறு பகுதிக்கு உணவு சென்று விடுவதால் ரிலாக்ஸான உணவு வயிற்றுக்கு கிடைக்கிறது. Peristaltic movement in oes-phagus என்று இதைச் சொல்வோம். முறையாக செறிமானம் ஆகாததால் இன்சுலினின் தேவை கடைசியில் நடக்கும்.

வெளியில் அலைந்து விட்டு வருகிறவர்களுக்கு தண்ணீர்தான் முதலில் தேவை அதற்கு பதிலாக குளிர்பானம் குடித்து தாகம் தணிப்பது தவறான விடயம். வெய்யிலில் அலைந்து வந்தவுடன் உடனடியாக தேவை என்பதால் குளிர்பானங்களை விரும்புகின்றனர். உண்மையில் எந்த சத்துக்களும் இல்லாத Empty Calories என்பதனை நாம் கவனிப்பதில்லை. இந்த கலர் பானங்களில் இருக்கும் அதிகபடியான சீனி உடனடி சக்தியை கொடுக்கிறது என்பது உண்மைதான். ஆனால் உடலின் தேவைக்கு அதிகமாக சீனியின் அளவை செறிமானமாக்க இன்சுலினும் அதற்கேற்ற அளவு தேவைப்படும்.

இந்த வகையில் தலைகீழ் முரண்பாட்டால் தான் நீரிழிவு நோய் ஏற்படுகிறது. உடலுழைப்பு குறைந்த இன்றைய தலைமுறை அதிக பருமனோடு இருப்பதற்கான முக்கியமான காரணங்களில் குளிர்பானங்களுக்கு அதிக பங்கு உண்டு. குளிர்பானத்தில் இருக்கும் வேதிப் பொருட்களின் கலவை பற்றி பார்த்தால் நிறத்துக்காக கலரிங், எஸன்ஸ் சேர்க்கப்படுகிறது. பலருக்குத் தெரிந்திருக்கும் சமீப காலமாக கொய்யாப்பழம், மாம்பழம், தோடம்பழம் போன்ற பழங்களின் சுவை கொண்ட குளிர்பானங்கள் என்று விளம்பரம் செய்கின்றனர். அந்த பழங்களுக்கும் இந்த குளிர்பானங்களுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை. It Contains No Fruite Pulp என்று அவர்களே குறிப்பிட்டு இருந்தாலும் நாம் அதை கண்டு கொள்வதில்லை.

மாம்பழத்தின் சுவையைப் போலவே ஒரு குளிர் பானம் இருக்க வேண்டும் என்றால் esters என்ற செயற்கையான வேதிப்பொருட்கள் மூலமே அந்த மாம்பழச்சுவையை உருவாக்க முடியும். இத்தோடு நீண்ட நாட்கள் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு நிறைய வேதிப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றது. இது எதுவும் நல்லது கிடையாது. இதை உடல் ஏற்றுக்கொள்வதும் இல்லை.

இந்தக் குளிர்பானங்கள் எந்த அளவிற்கு சுகாதாரமாக தயாரிக்கப்படுகின்றன. பொதி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக்குறிதான். ஆதன் எதிரொலிதான் குளிர்பானத்தில் கரப்பான் பூச்சி கிடக்கின்றது, பல்லி கிடக்கின்றது என்ற செய்திதான் அவ்வப்போது ஊடகங்களில் செய்திகள் வருகின்றன. முறையாக குடிநீரை சுத்திகரிக்காததால் தான் குளிர்பானங்களில் பூச்சிகொல்லி கலப்பும் வருகின்றது. குளிர் பானமாக மாற்றம் செய்யும் போது தண்ணீரில் இருக்கும் பூச்சிகொல்லிகளின் அடர்த்தி இன்னும் அதிகமாகி விடுகின்றது.

இதனால் என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுமென்றால் குளிர்பானத்தை தொடர்ந்து பயன்படுத்துபவர்களுக்கு தொண்டையில் தொற்றுக்கள் உருவாவது வயிற்றுவலி போன்ற சின்னச்சின்ன தொந்தரவுகளில் ஆரம்பித்து இரைப்பைக்குடல், கல்லீரல் போன்ற இடங்களில் அழற்சி கூட ஏற்படலாம். இதுவே நாளடைவில் பெரிதாகி உணவுப்பாதையில் புற்றுநோய் ஏற்படவும் காரணமாக அமையலாம். உலக மயமாக்கலின் விளைவாக பல வெளிநாட்டுப் பொருட்கள் நம் நாட்டுக்குள் வந்திருக்கின்றன. வெளிநாட்டு உணவுப்பொருட்களை அரசு தவிர்க்க வேண்டும் என்று சொல்வதை விட அரசாங்கம் அனுமதி கொடுக்கின்றது என்ற காரணத்துக்காகவே நாம் சாப்பிட வேண்டும் என்று அவசியம் இல்லையே?

ஒரு உணவு நம் உடலிற்கு சரிவராது என்றால் முன்பு அதை நிறுத்திவிட முடிந்தது. இப்போதோ எந்த உணவையும் நம்மால் உடனடியாக நிறுத்திவிட முடியவில்லை. அந்த அளவிற்கு போதைப்பொருள் போல தன் கட்டுப்பாட்டில் நம்மை வைத்திருக்கின்றன. நவீன உணவுகள் குளிர்பானங்களில் இருக்கும் இனிப்பின் காபன் வடிவமும் நம்முடைய DNA காபன் வடிவமும் ஒரே மாதிரியான தோற்றத்தில் இருக்கின்றது என்பதையும் இதனால் குழப்பம் ஏற்படுகின்றது என்பதை சமீபத்தில் ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். இதனால் என்ன பிரச்சினைகள் வரும் என்று இனிமேல் தான் தெரியும்.

இது போல் யாராவது குற்றம் சாட்டினால் குளிர்பான நிறுவனங்களே ஆய்வுகள் நடத்தி இது நல்ல குளிர்பானம் தான் என்று சொல்வதும் உண்டு இவற்றிடம் இருந்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு விடயத்தை கவனித்துப் பாருங்கள்.ஆரோக்கியமான நம் நாட்டிற்கு உணவகளை சாப்பிடும் போது குளிர்பானம் குடிக்க வேண்டும் என்று தோன்றாது. பீட்சா,பர்கா, பொப்கான் என்று பேக்கரி உணவுகளையோ துரித உணவுகளையோ சாப்பிடும் போது தான் குளிர்பானம் வேண்டும் என தோன்றும். அதனால் ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடும் பழக்கத்தை உண்டாக்கி கொள்வது இதிலிருந்து தப்பிக்க ஒரு நல்ல வழியே பேவின், ஸ்டைல் என்று நினைத்துக் கொண்டு பணத்தையும் உடல் நலத்தையும் கெடுப்பதற்கு பதிலாக இளநீரோ மோரோ குடிக்கலாம் என யோசிக்க வேண்டிய விடயம் தான்.


க.சுகந்தினி  
2018 கணிதப்பிரிவு  
காரைநகர் இந்துக் கல்லூரி


## சிந்தனைத் துளிகள்



- ✧ நாம் ,வாழும் வாழ்க்கை நிரந்தரமற்றது என உணர்பவன் மனிதர்களில் மாணிக்கமாகிறான்.
- ✧ மனிதனில் தீய எண்ணங்கள் வரும் போது இறைவனை மனக்கண் முன் நிறுத்தி அவனோடு ஒன்றி விடு. தவறுகள் செய்யாது வாழ இது உன் பிரதான கடமை.
- ✧ வேண்டாத செயலைச் செய்யப்போகும் முன் உங்கள் மனச்சாட்சியிடம் கேளுங்கள் பின் அதன்படி நடவுங்கள்.
- ✧ சுயநலம் தன்னை மேம்படுத்துவது பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும். பொதுநலம் சமூகத்தின் மேம்பாட்டை பற்றியதான சிந்தனையாக இருக்கும்.
- ✧ முயற்சி செய்து கொண்டே இரு வெற்றி ஒரு நாள் நிச்சயம் கிடைக்கும்.
- ✧ உலகில் சகலரிலும் அன்பு காட்டு ஆனால் நம்பி விடாதே நீ அவர்கள் நம்பும் படி நட.
- ✧ மனட்சாட்சிக்கு கட்டுப்பட்டு நடப்பவன் எதற்கும் பயப்பட தேவையில்லை இறைவனுக்கு மட்டும் பயந்தால் போதும்.
- ✧ மனதிலுள்ள தன்னம்பிக்கையை எந்த சூழலிலும் நாம் இழந்தால் அது மரம் தன் வேரை இழந்தால் போல் ஆகிவிடும்.


செ.தேனுசா  
2017 கலை  
காரை இந்துக் கல்லூரி

# மருத்துவ(ன்)ம்



கலங்களால் ஆன விலங்குகள் - கலங்கும்
நோய்களால் - அதற்கு
கலங்களால் ஆனவனே தீர்வு கண்டான்

மண்ணிற்குள் போகும் உடலிதற்குள்
எத்தனை மகத்துவம் - அதற்காகத்தான்
மருத்துவ(ன்)ம்

இரைப்பையை நிரப்புங்கள - என்றான்
புற்று நோயின் பிறப்பிடம்
நுரையீரல் என்றான்

சீறுநீரகத்தை சீராக்கினான்
எலும்புகளைக் கூட எண்ணி முடித்தான்
மூளையின் மடிப்பை முன்னேற்றினான்
கோழைக்கும் மருந்து
மூளைக்கும் மருந்து - இது தான்
மருத்துவ(ன்)ம்

நாடியையும் நாளத்தையும்
ஓடியே தேடினான்
குருதியோடு சேர்ந்து

இழையங்களுள் சிக்கியவன்
நரம்புகளுக்கும் வரம்பில்லை என்றான்
ஆதலால் இரும்பிலும் ஆனான்
மனிதன் இப்போ

செங்குருதி வெண்குருதி
குருதிச் சிறுதுணிக்கை என
குருதியை சிறப்பித்தான்

கருவில் இருந்தவனைக் கவனமாய்
வெளியே எடுக்கிறான் - இவன்
எங்கே இருந்தான்
கருவிலா கணினியிலா?
கருவில்.............

நான்கு அறை கொண்ட இதய வீட்டுக்கு
இருவழிப் பாதை அமைந்ததால் - துவாரம்
ஏற்படுகிறது போலும் - அதை
மூடவும் முயற்சிக்கிறான் - துடிப்பு
நின்று விடும் என்பதால்!

முள்ளந்தண்டு உள்ளவன் மனிதன் என்றும்
அதில்லாதவை விலங்கு என்றும்
விளக்கினான் - இதைப் புரியாமல்
மனிதன் விலங்கானான் - ஆதலால்
மருத்துவம் வளர்ந்த பின்னும்
மடிகிறது பல உயிர்கள்

யோ.டர்மிதா
2017 தொழில்நுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி



# சில பதினெண் கீழ் கணக்கு நுல்கள் பற்றிய குறிப்புக்கள்

## நாலடியார்

நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாவால் இயற்றப்பட்டதால் நாலடியார் எனப்பட்டது இந்நூல் சமண முனிவர் நானூறு பேரால் பாடப்பட்டது. திருக்குறளைப் போலவே பொருட்பால் காமத்துப்பால் அறத்துப்பால் எனும் மூன்று பகுப்பாக உள்ளது.

## நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை என்பது நான்கு இரத்தினத் துண்டங்கள் என்னும் பொருளைத் தரும் ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கூறுவதால் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் விளம்பிநாகனார்.

## இனியவை நாற்பது

பூதந்தேவனார் இயற்றியது. 40 வெண்பாக்களைக் கொண்டது நான்கு. பாடல்களில் இன்பம் தருவன நான்கினை கூறியுள்ளார். மற்ற பாடல்களில் மூன்று இன்பங்களைக் கூறியுள்ளார்

## இன்னா நாற்பது

ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டு ஒவ்வொன்றையும் ''இன்னா'' என எடுத்துக் கூறுதலின் இன்னாநாற்பது எனப் பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் கபிலதேவர் இயற்றினார்.

## திரிகடுகம்

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துப் பொருட்களைக் குறிக்கும் மூன்று மருந்துப் பண்டங்களால் ஆகிய திரிகடுகம் என்னும் மருந்து உடல் நலம் பேணுவதைப் போன்று இந்நூற் செய்யுட்களில் மும் மூன்றாக உரைக்கப் பெற்ற அறங்களும் உயிர் நலம் பேணுவோம் இதனாலேயே இந்நூல் திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் நல்லாதனார்

## ஆசாரக் கோவை

ஆசாரக் கோவை என்பதற்கு ஆசாரங்களினது கோவை என்றோ அல்லது ஆசாரங்களைத் தொகுத்த கோவை என்றோ பொருள் கூறலாம். இதன் ஆசிரியர் கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார்

கி.லக்சியா
2017 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி

# நினைவின் நிழல்கள்



செறிந்து காணும் கலையின் பொருளும்
சிறந்த செயலும் சீரிய அறமும் செய்து
நிறைந்த இன்ப வாழ்வைக்காண
கற்றுத்தந்த இப்பள்ளி முற்றம்
ஆண்டுகள் பல நாம் அறியாமலே கடந்தன
பிரிவு எனும் பின்நொடியில் -நாம்
மீள்நோக்கும் எம் நினைவுகள்

புருவம் நெற்றி ஏற இருவிழி
வையத்தில் புவன மதில் வானும் பூச்சொரியும்
புனிதமான எம் அதிபர் -தரை மண்ணும்
தலை வணங்கும் தாயே நின் அன்பிற்கு

காற்றும் கனல் மண் புனலும்
வானும் கனவும் வண்ணமய நனவும்
அழகிய வாழ்வமைக்க அகல் காட்டும்
எம் ஆசான்கள் திகட்டும் திறனும்
திறம்படும் செயலும் நாற்றிசை எண்திசை
ஏற்புடன் போற்றிடவே பணிகின்றோம்
நும்பாக பங்கயங்களை.......

காணும் இருள் வானமதில்
கருமேகங்கள் தண் நடுவே
கண் பறிக்கும் வெண் நிலவாய்-நாம்
வெள்ளை உடை உடுத்தி வெண்
புறாக்களாய் உலா வந்தோம்
உடன் பிறவா உறவுகள் பல
ஒன்றாய் கிடைத்தனவே

உள்ளத்தின் உணர்வுகளின்று
ஓசையுடன் உருவம் தொடுகையில்
பிரிவு எனும் நெடுஞ்சுவர்
மனதினை கசக்குகிறதே...

விழியோரம் நீர் பனிக்கு விடையின்றி
வினவுகின்றோம் எதிர்கால ஏக்கமதை
மேவு கடல் தாள இசை மேகம்தனில்
புதிய விசை மேகமது மகிழ்வு கொண்டு
மண்ணில் பொழியும் ஆனந்த மழைத்தூறல்
எம் விழிகளில் கண்ணீர் சாரல்

பல்லாண்டு பழகி பள்ளி உறவுகள்
பாச வலை மறந்து பிரிந்திட
எமக்கோ துளியேனும் பிரியமில்லை
பின்னிய பாசவலை கண்முன்னே
மழைக்காற்றில் சிக்குவது காண
மனங்களில் பெரும் தயக்கம்
கனிவான மனம் கசங்கிய கண்கள்
இறுதி நொடியினில் நாம் இன்று
இயல்பினை சுமக்கின்றோம்

நாம் மேகங்களாய் சிதறினாலும்
மழை கருமுகிலாய் ஒன்று சேர்வோம்
நம்பிக்கையுடன் நடைபோடுகின்றோம்
நாளைய உலகம் -மாணவர்
எம் கையில்

ந.யஸ்மினா
2017 வர்த்தகம்
காரைநகர் இந்துக் கல்லூரி

# வாழ் வாழ்ந்து பார்



வாழ்க்கை ஒரு நந்த வனம்
வனப்பு மிகு மலர்த் தோட்டம்
ரோஜா ஒரு அழகிய மலர்
முட்களும் கூடவே முளைத்தால்
கண்ணீர் மட்டுமா
களிப்பும் கூட

நண்பா வாழ்வை
வாழ்ந்து பார்
அப்போது தான் புரியும்
அதன் பக்கச் சுவடுகள்
புரட்டிப் புரட்டி
இரசித்துப் படி-அது
சுவையுள்ள காவியம்

கானல் நீரில்
வலை வீசும் வித்தையை விடு
சேற்றிலும் கால்வை
வியர்வை சிந்து
சொர்க்க வாழ்வு
சொந்தமாகும்

நிகழ்காலம் இன்பமென்று
எதிர்காலம் இருளாக்காதே
மூங்கில் தடியில்
துளையிட்டு ஊது
இராகம் சுகமளிக்கட்டும்
மூங்கிலாக முகாரிபாடாதே

வாழ்க்கை வாழ முடிந்தால்
அட்சய பாத்திரம்
மறுக்கப்படும் போது
நரகமாகலாம்
நீர்க்குமிழியா வாழ்க்கை
குற்றாலம் குளத்துப் பார்
மேல் நோக்கா பேராறு
முயன்றுபார் உன்வாழ்வு

வனமான நீரருவி
மீட்டிப் பார் வீணையின் நாதம்
வீறு கொள்வேங்கையராய்
விழித்தெழு
வாழ்ந்து பார்
வாழ்வு என்ன சுமையா?

உ.மேகலா
2017 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி



# பள்ளி பருவம்

துள்ளித்திரிந்த காலம் பள்ளிப்பருவம்
மீண்டும் வராத பருவம் - நினைத்து
ஏங்கும் உள்ளம் தவியாய் தவிக்கும்
சோறு இல்லை உடை இல்லை
அந்நாளில் சந்தோசத்துக்கு எல்லை-இல்லை

கள்ளமில்லாத உள்ளம் - கபடம்
இல்லாத பேச்சு சிரிப்பை தவிர
துயரங்கள் எதுவும் அறியாத பருவம்
நட்புக்காய் சண்டை போட்ட காலம்
நினைவில் என் தோழர்களுக்கு மட்டும்

சுயநலம் இல்லாத நட்பு - சுதந்திரமாய்
பழக பள்ளி குறும்பு தலைமுறையாய்
தொடரும் புதிர் இது - போட்டியாய்
படித்த பாடங்கள் இன்றுவரை நினைவிலே
எதிரியாய் நினைத்த நட்பு எதிரிதான்

இன்று எல்லாம் இருந்தும்
உண்மையான நட்பு இல்லை
சந்தோசமும் இல்லை - உண்மை
நட்புக்காக ஏங்குபவர் பலர்

கி.டிலக்சன்
2017 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி





# CRICKET

Cricket is one of the most popular games in the world today. It is played with much enthusiasm by youngsters in many countries.

The game of cricket originated in England. At the beginning it was not played today. It took a number of years to become what it is now. The British introduced cricket to the countries they ruled. Cricket was brought to Sri Lanka also by the Englishmen.

Though England is the 'mother' of cricket and the M.C.C. the first cricket club, it is perhaps more keenly played in countries like west India and Sri Lanka.

Cricket needs eleven players each side of the team. It includes a caption, a wicket keeper, bowlers and batsmen. Cricket ball is different from the tennis ball. It is hard and a fast ball can cause serious injury. To protect themselves , batsmen wear pads , gloves and helmets. The wicket keeper too wears pads and gloves.

Today cricket is a popular game and it is played between nations. Member of the I.C.C.- England , Australia , west indies , Pakistan , New Zealand ,India and Sri Lanka play test matches lasting five days .

Cricket is sometimes boring. Probably that is the reason why Bernard Shaw called cricket as "a game played by eleven fools and watched by eleven thousand fools" – but cricket is very often interesting and always fascinating whatever the criticism may be.

S. Sarangan

2017 TEC

Karainagar Hindu College



# தமிழ்

தமிழ் படிக்க தமிழ் நாட்டில்
தயங்குவது ஏன்?
தமிழை விட்டு அயல்மொழியில்
மயங்குவது ஏன்?

பாலூட்டும் போதினிலே
பைந்தமிழை ஊட்டவில்லையா?
தாலாட்டுப் பாடலையே
தாய்மொழியில் பாடவில்லையா?
காதினிலே தமிழைக்
கேட்டு விட்டால் கசக்கின்றதா?
ஆதரவாய் ஆகிவிட்ட
அயல்மொழி தான் இனிக்கின்றதா?

பிறமொழி நூலையெல்லாம்
பயின்று தெளிந்திடு!
சிறப்பான செந்தமிழைத்
தேர்ந்து களித்திடு!

தமிழினிலே இல்லாதது
தரணியிலே என்ன இருக்கு?
தமிழிலது இல்லையெனில்
தமிழிலதை உண்டாக்கும்!

தமிழர்களே தமிழ் நாட்டில்
தமிழை அழிப்பதா?
தன்மகனே தரம் தாழ்ந்து
தாயைப் பழிப்பதா?
எவராலும் அழியாத
அமர மொழியிது!
தேவரெலாம் பேசுகிற
தெய்வ மொழியிது!

பே.சரண்யா
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி

## கல்வி



தேடிப் பெற வேண்டிய சித்து
தேடி வைத்துப் பார்க்கும் போது
முத்து
கோடி இன்பம் தந்துவிடும் வித்து
அதுவே கல்வி என்னும் பொதுச் சொத்து

புத்தகத்திலிருக்கும் போது எழுத்து
தத்துவமாய் வாய் சொல்லும் போது கருத்து
அதைப் பயன்படுத்துவது உன்னைப் பொறுத்து
கல்வியே உண்மைச் செல்வமென
உன் மனதில் நிறுத்து

கல்வியை எதிர்ப்பவரை வருத்து
ஆசானைப் பேசாதே மறுத்து
அதை இன்னும் நீ வலியுறுத்து
நாளை உன் பெயர் பொன் எழுத்து

கல்வி என்பது மூன்றெழுத்து
இளமைக் கல்வியோ சிலை எழுத்து
கல்வியில் உன்னை முழுமையாக ஈடுபடுத்து
அதனால் நீ பெறுவாய் உயர்மதிப்பு

த. தர்சிகா
2017 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி

## கல்லூரி வாழ்க்கை



கற்றுத் தந்த பாடங்களும்
பெற்றுத் தந்த அனுபவங்களும்
மிகையாகி நிற்கிறது
ஒவ்வொரு நாட்களும்
ஏதேனும் ஒரு வகையில்
அர்த்தம் அடைந்தே நினைவுற்றது
பெரும்பாண்மை நாட்களை
நட்பென்ற உணர்வே
தன்னுள் நிறைந்துக் கொண்டது..!
மெல்லியதாய் அரும்பிய நேசம்
புன்னகைப் பூக்களை பகிர்ந்து
மணம் வீசி
மனதிற்குள்ளேயே தேக்கம் கொண்டது..!
புத்தகப் பாடங்களை விட
வாழ்கைப் பாடங்களையே
அதிகம் கற்பித்தது
நம் கல்லூரி நாட்கள்!!!

க. நவமதி
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி



# விஞ்ஞான கருவிகள்



1. ஹைட்ரோமானி - திரவ அடர்த்தி
2. ரிச்டர் மானி - பூமி அதிர்ச்சி
3. ஒடியோ மானி - ஒளியின் திறன்
4. அம்பியர் மானி - மின்னோட்டம்
5. அனிமோ மானி - காற்றின் வேகம்
6. அடியோ மானி - ஒலியின் அளவு
7. பரோமானி - காற்றின் அமுக்கம்
8. காடியோகிராப் - இருதயம் வேலை செய்வதை காட்டும் கருவி
9. குரோனோமானி - திசையை சரியாக காட்டுவதற்கு பயன்படும் கருவி
10. லக்டோமானி - பாலில் உள்ள தண்ணீரை அளக்கும் கருவி
11. தொலைநோக்கி - தூரத்தில் உள்ள பொருட்களை பெரிதாக்கும் கருவி
12. எலக்ரோட்ஸ் கோப் - மின்னோட்டம் உள்ளதா என்பதை பரீட்சிக்கும் கருவி
13. நொட்ஸ் - கப்பல், படகு, கடலில் செல்லும் போது வேகத்தை அளக்க பயன்படும்.
14. ரேடர் - விமானத்தின் திசை தூரம் உட்பட விடயங்களையும் பதியும்
15. கலோரி மானி - வெப்பத்தின் அளவை அளக்க பயன்படும்.
16. அல்டி மானி - விமானம் பறக்கும் போது உயரத்தை அளக்கும் கருவி.
17. பெரிஸ்கோப் - நீர் மூழ்கியின் மேல் தளத்தில் உள்ளவற்றை கீழ் உள்ளவர்கள் அறியக்கூடிய ஆடி.
18. ரோபோ - தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இயந்திர மனிதன்.
19. மின்காந்த கொள்கையை கண்டறிந்தவர் - கிளார்க் மக்ஸ்பெல்
20. மின்காந்த கதிர்களை கண்டறிந்தவர் - ஹீனரிச் கேட்ஸ்

பா. டனுஷா
2018 (கலை)
காரைநகர் இந்துக் கல்லூரி



# வெற்றிக்கு வழி

பூகம்பம் நடந்து முடிந்த
மறுநாளே
இதழ் விரிக்கும் பூவிடம்
கற்றுக்கொள்
வெற்றிக்கு வழியை......

கற்பாறை கூட
துளைக்காத மலைகளை
ஊடறுத்துத் துளைக்கும்
தாவர வேர்களிடம் கற்றுக்கொள்
வெற்றிக்கு வழியை......

துப்பாக்கிச் சன்னங்கள் கூட
துளைக்காத செப்புத்தகட்டை
செல்லரித்துத் துளைக்கும்
கறையான்களிடம்
கற்றுக்கொள்
வெற்றிக்கு வழியை......

தலை கீழாய்ப் பிடித்தாலும்
தலை நிமிர்ந்து எரியும்
தீக்குச்சி சுவாலையிடம்
கற்றுக்கொள்
வெற்றிக்கு வழியை......
பயிற்சி திறனளிக்கும்
முயற்சி பலனளிக்கும் என
முழு மூச்சாய்
முயற்சி செய்
அதுவே தான்-உன்
வெற்றிக்கு வழி

சுட்ட பிறகு வெண்மை தரும்
சங்கு போலிரு மானிடா!
அதுவே உனது
வெற்றிக்கு வழி

அரசியற் கட்சிகள்
ஆயிரம் வந்தாலும்
அன்ன சத்திரம்
பற்பல நட்டாலும்
துளைகள் பல இட்ட பிறகும்
இனிய நாதம் தரும்
மூங்கில் போல்
உன் மனதை மாற்றிக்கொள்
அதுவே அடுத்த உனது
வெற்றிக்கு வழி

தி.அனோஜா
2017 கலைப்பிரிவு
காரைநகர் இந்துக்கல்லூரி

## பள்ளி பருவமதில்



துள்ளித்திரிந்த காலம் பள்ளிப்பருவம்
மீண்டும் வராத பருவம்- நினைத்து
ஏங்கும் உள்ளம் தவியாய் தவிக்கும்
சோறு இல்லை உடை இல்லை
அந்நாளில் சந்தோசத்துக்கு எல்லை-இல்லை

கள்ளமில்லாத உள்ளம்- கபடம்
இல்லாத பேச்சு சிரிப்பை தவிர
துயரங்கள் எதுவும் அறியாத பருவம்
நட்புக்காய் சண்டை போட்ட காலம்
நினைவில் என் தோழர்களுக்கு மட்டும்

சுயநலம் இல்லாத நட்பு- சுதந்திரமாய்
பழக பள்ளி குறும்பு தலைமுறையாய்
தொடரும் புதிர் இது- போட்டியாய்
படித்த பாடங்கள் இன்றுவரை நினைவிலே
எதிரியாய் நினைத்த நட்பு எதிரிதான் இன்று வரை

இன்று எல்லாம் இருந்தும்
உண்மையான நட்பு இல்லை
சந்தோசமும் இல்லை- உண்மை
நட்புக்காக ஏங்குவபர் பலர்


கோ.அஜித்குமார்
2017 தொழில்நுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி

# The importance of the study of English



Language may be described as the vehicle for the transport of ideas from person to person. we are all aware that there are innumerable languages in the world. Each Nationality usually uses its own mother tongue as the medium of instruction in schools. Each country has its own national language or languages. In schools generally in addition to the mother tongue, a second language is also taught. In many countries of the world English is accepted as the second language.

The United States of America and some countries of the some countries of the brinies common wealth along with Britain use English as their language of administration. In many other countries of the world English is used in the field of higher education, science and technology. Other languages like Russian, French, germane and Japanese are also used in these fields. But none of these can be described as an international language because they are not used much outside their own countries. So a beginner who wants to study other languages can study with more ease and understanding if he knows the English language in addition to his mother tongue.

English language is one that is more widely known by the international community than any other languages. A tourist who knows English language can manage without much difficulty in most of the world. Computers are fed with their data in English language. A person who wishes to continue his studies in foreign countries needs a fair proficiency in the English language. Now the world has become smaller with people migrating to or travelling from country to country for barrios reasons and purposes-business, employment, higher education or even as more refugees. As a result, people are beginning to realize more and more the importance of the English language.

In srilanka the need to learn the English language has led to the rise of a number of private tuition classes called spoken English classes and general English classes. Even students are now beginning to realize the importantance of English language for better knowledge of science and technology. Businessmen and executives too seem to have realized this need.

As students what is our role in this context? Is it enough to listen to the cricket commentary in English or does it suffice to watch some programme on television? Or is it enough to follow some English classes in private tutories? All these may help but I feel that there are other better methods available for us which we do not make use of. Do we make the best use of English classes provided to in our schools? So we pay as much attention to English as to the other subjects in the curriculum? Do we make best use of our library? Neglecting the study of English in the earlier stages of our school career and then attending "spoken English classes" will not help us at all.

V. Pathmini
2017 Commerce
Karainagar Hindu college


# விடியலை நோக்கி



எழுந்திரு!
உன்னால் முடியும்
வெற்றியின் புதிய வடிவம் நீ
நெருப்பைக் கிழித்து
பாதை செய்
காற்றில் எறி
விண்ணையும் தாண்டு
பள்ளங்கள் படிக்கட்டுகளாகும்
விடியலின் பொழுதிற்காய்
இன்றே புறப்படு
துணிந்து செல்
இலட்சிய வேகம்
புயலைச் சுருக்கும்
இனியும் நீ தூங்கி விடாதே
எழுந்து நில்
துணிந்து செல்
வாழ்க்கை வனப்பில்
வழுக்கி விடாதே
மலைகளாய் பிளக்க வேண்டியவன்
மடுவைக் கண்டு அஞ்சலாமா
மரணம் வரை
கொண்ட கொள்கையை
குன்ற விடாதே-நீ
புதுயுகத்தின் புதிய வரலாறு

க.அபினோசா
2018 விஞ்ஞானப்பிரிவு
காரைநகர் இந்துக்கல்லூரி

# ஏக்கம் நிறைந்தது



வாழ்வியல் நூல் ஒன்றை வாசித்து
தெளிகையிலே வாங்கிக் கிழித்து
முற்றத்து மரம் முற்றிச் சடைக்கையில்
முற்றாய் தறித்து
மல்லிகை பூவினை மாலையில் கோர்க்கையில் மலரைப் பறித்து
எட்டாக்கனியை எட்டிப் பிடிக்கையில் எட்டிக் கடித்து
சறுக்கமர நுனி உச்சி தொடுகையிலே
சந்தால் அடித்து இல்ல விளக்கினால்
இருள் தொலைக்கையில் ஊதி அணைத்து
பஞ்சனை மெத்தையில் தூங்கிக் கிடக்கையில்
பஞ்சைக் கிழித்து இருண்ட கருமுகில்
மழையாய் பொழிகையில் காற்றில் கலைந்து
வாச மலர்ச் செடி வாசம் கமழ கையில்
வெட்டிச் சிதைத்து
பொன்னை உருக்கி ஓர் பொன்னை செய்கையில்
மணலில் மறைத்து துறையில் கிடைத்ததோர்
படகைத் தொடுகையில் துடுப்பை உடைத்து
தூரிகையில் ஒரு ஓவியம்
வரைகையில் துண்டாய் உடைத்து
தாகம் தீர்க்க மென்பானம்
பருகையில் தட்டிப் பறித்து பூங்கா வனத்திலோர்
பறக்கையில் சிறகை முறித்து நீங்கா
நிமிர்கையில் நெஞ்சில் பதித்து
உணர்வின் உயிர்ப்பில் ஊறித் திளைக்கை
ஊன்றி உதைத்து
இன்னுமாய் எண்ணி
கணக்கிலேயே ஏக்கம் நிறைந்தது

இ. துலக்சன்
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி

# பொது அறிவு

01- பசுபிக் கடலின் பரப்பளவு எவ்வளவு?
16,62,41,000KM

02- உலகின் மிக பெரிய உலர்ந்த பகுதி எது?
அட்டகாமா-சிலி

03- செம்பிறை எதனைக் குறிக்கும்?
அரபு நாடுகளின் செம்பிறைச்சங்கம்

04- மூன்றாவது கண் உள்ள பிராணி எது?
ஸ்பினோடயூன்

05- கண் இமைக்கும் நேரம் எவ்வளவு?
75மில்லிசெக்கன்

06- சதுரங்கத்தை கண்டறிந்தோர் யார்?
இந்தியர்

07- கிரிக்கெட் உலகின் பிதா மகன் யார்?
டொனால்ட் பிரட்மன்

08- ஜப்பானின் தேசிய சின்னம் எது?
கூட்டுப்புழு

09- உலகில் உள்ள சிறிய தாவரம்?
உல்பியா

10- நீர் அருந்தாத மிருகம் எது?
ஏலி

11- I.P விரிவாக்கம்?
Intelligent Quotient

12- கனடா நாட்டின் தலைநகரம்?
ஒட்டாவா

13- சீனப் பெருஞ்சுவர் எப்பொழுது கட்டப்பட்டது?
கி.மு221

14- மின் தடையின் அலகு?
ஓம்

15- பச்சை இல்லாத தாவரம்?
காளான்

கு.சதீஸ்குமார்
2018 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி



# என் வகுப்பறை

பயம் கலந்த சிரிப்புடன்
ஆரம்பம்........
புது உறவுகளின் உறைவிடம்
புதிது எல்லாம் புதிது
பென்சில் புதிது அழிப்பான் புதிது
புத்தகப்பை புதிது எம் மனசும் புதிது
குட்டிக் குட்டிக் கோவங்கள்
'டாக் டிக் டோஸ்' குட்டி குட்டி விளையாட்டுக்கள்

பிஞ்சு மனங்களில் சட்டென்று கண்ணீர்
பிரம்பை கண்டதுமே
டீச்சர் வெளியேறினால் - யாருக்கும்
தெரியாமல் புத்தகப்பையினுள் கைகள்
சென்று வரும்...கிறீம் கலந்த பணிஸ்
சுவைத்திட................

10ரூபா போதும் எங்களுக்கு
இடைவெளி மணி சத்தம்....
குட்டி வயிறு பக்குவமாய் நிறைந்திடும்
பாடம் புரிந்தால் டீச்சருக்கு
நான் தான் செல்லப்பிள்ளை
ஒன்றுமே புரியவில்லை என்றால்
நான் கள்ளப்பிள்ளை

வகுப்பறையில் குட்டிக் கோவில் வைப்போம்
ஆளுக்கொரு பூப்பை கொண்டுவருவோம்
வெள்ளிக்கிழமைகளில் தெய்வம் குட்டிப்பிள்ளைகள்
குருபூசை நவராத்திரி வந்ததுமே
கொண்டாட்டம் பெருவிழா
சொல்லில் அடங்காது சொன்னாலும் புரியாது

மனசில் கள்ளமில்லை கவலையில்லை
வஞ்சகமும் இல்லை
அன்பு கொள்ளும் தெய்வீக அறை
நம் வகுப்பறை
நன்றி இறைவா பள்ளி வாழ்க்கைக்கு
எப்போதும் கசத்திடாது வாழ்க்கை

சோ.தக்ஷன்
2017 கலை
காரைநகர் இந்துக் கல்லூரி

# நிலையில்லாத வாழ்க்கை



நிலையில்லா வாழ்க்கை -இதில்
தீமைகள் என்று ஒன்றுமில்லை
உணர்வுகளை ஒழித்து வைத்தால்
வாழ்வில் நிம்மதி வருவதில்லை
வாழ்வது கொஞ்சக் காலம்
வாழ்ந்து தான் பார்ப்போம் -தோழா

எதிர்பார்ப்புகள் என்றும் ஒருவனுக்கு
இன்பத்தை கொடுக்காது
எதிர்பார்ப்புக்கள் இல்லா வாழ்க்கை
எவனுக்கும் இங்கு வாய்க்காது
இவ்வுலகில் எதுவும் சொந்தமில்லை
நீ மண்ணுடன் போகும் போது –தெரிகிறது

கண் மூடி நீ தூங்கிவிட்டால்
இவ் உலகம் உன்னை விட்டுச் செல்லும்
கை கொடுத்து உன்னை கூட்டிச் செல்ல
உன் நிழலே உன்னைக் தடைவிதிக்கும்
வாழ்வோடு போராடும் வரைக்கும்
தீராது இந்த நடுக்கம்

உலகில் எத்தனை கோடி இன்பங்கள்
தொலைத்தோம் அத்தனையும் திரும்பாது நம் வாழ்வில்
பணமிருந்தால் உன்னை யார் என்று உனக்கே தெரியாது
பணமில்லாத மனிதனை இந்த உலகம் என்றுமே மதிக்காது
உன் பாதை எதுவென்று கூறாதே
தொடரும் உன் வழிப் பயணம் இது..........

கி. லாவண்யா
2017 தொழில்நுட்பம்
காரைநகர் இந்துக்கல்லூரி



# விஞ்ஞான ரீதியான சில விளக்கங்கள்

*வடக்குத்திசையில் தலைவைத்து ஏன் படுக்கக்கூடாது.?*

வடக்கே தலை வைத்து படுக்கும் போது பூமியின் காந்த மண்டலமும் மனித உடலின் காந்த மண்டலமும் எதிர்த்து செயற்படும் நிலை ஏற்படுகின்றது. இது வழக்கமாக நிகழ்ந்தால் அதாவது வழக்கமாக வடக்கே தலை வைத்துப் படுப்பதால் மனிதனில் ஸ்டீரிய என்ற நோயின் பாதிப்பு நாளடைவில் உண்டாகலாம் என்று நவீன மருத்துவ துறை வெளிப்படுத்தியுள்ளது.

*வலது கால் வைத்து ஏன் நுழைய வேண்டும்?*

ஆன்மீகமாகச் சிந்தித்துப் பார்த்தால் வலது சக்திக்கு தனிப்பட்ட வருணை இருப்பதைக் காணலாம் ஒரு மனிதனை சோதனை செய்து பார்க்கும் போது அவனது வலது பாகத்து முக்கிய நரம்புகளின் செயற்பாடுகள் அவனை கூடுதல் கடமைகளைச் செய்ய வல்லவனாக்குகின்றன என்பதை காணலாம். அதாவது வலப்பாகத்தால் திறமையுடன் செயற்படலாம் என்று பொருள் மனநிலையும் வலது பாகத்தை சார்ந்திருக்கின்றது. வலது கால் வைத்து பிரவேசித்து அதே போல் வெளியேறுவதும் சுபலட்சணம் என்று கருதுகின்றோம். மனசாஸ்திரமும் இதை ஆமோதிக்கின்றது.

*உட்கார்ந்த நிலையில் உணவருந்த வேண்டும் என்பது ஏன்?*

நாம் உணவருந்தும் போது உடலின் மூட்டுக்களில் அசைவு ஏற்படுகின்றது என்று இன்றைய சாஸ்திரமும் அறிவிக்கின்றது. அந்த அசைவு மூட்டுக்களுக்கு அதிக பாரம் உண்டாக்கும். அமர்ந்த நிலையில் உணவருந்தினால் இந்த பாரத்தை குறைக்க இயலும். மேலும் நின்று கொண்டு உணவருந்தினால் மிதமிஞ்சி உணவருந்த வாய்ப்புண்டு. அதிகமாக உண்ணுவதும் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்பதும் நாம் அறிவோம். வயிறு நிரம்ப உண்ணாதவர்கள் பல நோய்களிலிருந்தும் விலகியிருப்பார்கள் உன்று மருத்துவத்துறை பல வழியில் அறிவித்துள்ளது.

*வெறிநாய் கடித்தால் குரைத்துச் சாவதுண்டா?*

விஷ பாதிப்பின் கடைசிக் கட்டத்தில் தசைகள் மிகையாகச் சுருங்குவதும் விரிவதும் வேகமாக மாறி மாறி நிகழ்கின்றன. தொண்டையிலிருக்கும் தசைகள் இவ்வாறு சுருங்கி விரியும் போது பாதிக்கப்பட்டவரின் குரல் அகோரமாகின்றது. இதை நாய் குரைப்பதுக்கு சமனாக்கி வந்தனர்.

அது போலவே கை கால்களிலுள்ள தசைகள் சுருங்கி விரியும் போது நோயாளியின் நடையும் அசைவுகளும் நாயின் சேட்டைகள் போலவே இருக்கும்.

நிஜத்தில் வெறிநாய்க்கடி ஏற்பட்டவர்கள் நாயைப் போன்று குரைப்பதுமில்லை நடப்பதுமில்லை இது தான் உண்மை.

*ஆரத்தி எடுப்பதன் பின்னுள்ள இரகசியம் என்ன?*

தூரத்துப் பயணங்கள் கழிந்து வரும் குடும்பத்தினர் திருமணம் முடிந்து மணமகன் வீட்டுக்கு வரும் தம்பதிகள் மகப்பேறு முடிந்திருக்கும் தாய் முதலியோரைப் பொதுவாக ஆரத்தி எடுப்பதுண்டு. தண்ணீர் மஞ்சள் சேர்த்து அதில் சிறிது சுண்ணாம்பு சேர்க்கின்றனர். மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த தண்ணீருக்கு சிவப்புநிறம் வருகின்றது. இதை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து அதற்கு இருபக்கங்களிலும் தீச்சுடர்கள் எழுப்பி சம்மந்தப்பட்ட நபரின் உடலுக்கு மூன்று முறை சுற்றி விடுவதையே ஆரத்தி என்று கூறுகின்றோம். மஞ்சள் மற்றும் சுண்ணாம்புக்கு கிருமிகளை அழிக்கும் திறன் உண்டு என்பதை நாம்

கண்டறிந்துள்ளோம். அந்த நபரின் மேல் வந்து சேர்ந்திருக்கும் விஷ அணுக்களை அழிப்பதே ஆரத்தியின் உத்தேசம் ஆகும்.

### *தாழம்பூ பூஜைக்கு எடுக்காதது ஏன்?*

தூய்மையும்,அழகும்,நறுமணமும் மிகுந்த ஓர் மலரே தாழம்பூ. இதை பூஜைக்கு எடுக்க கூடாது என்பதன் பின்னால் சில காரணங்கள் உண்டு. பழைய கதையில் தாழம்பூ பொய்ச்சாட்சி கூறியதாகவும் அதற்கான தண்டனையை அனுபவிக்கின்றது என்றும் கூறுவது நிஜத்துக்கு ஒவ்வாது. தாழம்பூவை விரிவாக சோதனை செய்ததில் அதில் எதிர்மறை விசைகள் செயற்படுவதாக தெரியவந்துள்ளது. இந்த அழகான பூவை பூஜைக்கு எடுக்காததன் காரணம் இதுவே.

### *தவளை கத்தினால் மழை பெய்யுமா?*

பெரும்பான்மையான தவளையினங்கள் முட்டையிடுவது தண்ணீரிலாகும். அதனால் இவற்றின் இனப்பெருக்கத்திற்கும் மழைக்கும் சம்பந்தமுண்டு. மழைக்காலம் ஆரம்பிக்கும் போது ஆண் தவளைகள் இணையை வசீகரிக்க இவ்வாறு கத்துகின்றன. உண்மையில் இவை கத்துவதில்லை. சுவாச கோசத்தில் இருந்து சக்தியாக வெளியேயும் உள்ளேயும் செல்லும் வாயு குரல் நாண்களில் தட்டும் போது கத்துவது போன்று இவ்வோசை வெளிப்படுகின்றது. தவளையின் வாய்க் கடியில் இருக்கும் வாயுப்பைகள் பலூன் போன்று விரிவடைந்து ஒரு ஒலிபெருக்கியாக செயற்படுகின்றது.

பல வகைத் தவளைகளும் எழுப்பும் ஓசையில் வேறுபாடு இருந்தாலும் எல்லாவற்றிற்கும் தன் சொந்த இணைகளை கண்டறியும் திறன் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

### *இப்போது தான் சொன்னோம் உமக்கு ஆயுள் நூறு*

ஒருவரைப்பற்றி நல்லதோ , கெட்டதோ பேசினாலும் கூட தன்னைக் குறித்து பிறர் சிந்திக்கின்றதே மகிழ்ச்சி தரும் விடயம் தான். தன்னைப் பற்றி பேசுவதற்கு யாராவது உள்ள ஒருவருக்கு ஆபத்துக்கு உதவ உறவினரோ நண்பர்களோ இருப்பார்கள். ஆயுள் நீடிக்கும் என்று கூறுவது இதனால் தான்.

யோ.டர்மிதா
2017 தொழிநுட்பம்
காரைநகர் இந்துக் கல்லூரி

# நீ வருவாய் என

உதிரத்தின் உயிர்ப்பில் மொட்டவிழ்ந்து பூத்த
ஒரு கொடியில் இரு மலர்கள் நாம்
உறவின் வரையறைக்குள் சிலிர்ந்தெழுந்த சிங்கார ரோஜாக்கள் நாம்

கடித்து சுவைத்த பாதிமாங்காயின் சுவை மறந்து பாதியில் நீ என்னை
அடித்துப் பிடித்து விளையாட அழைத்த அந்த நாட்களின் நினைவு
இன்னும் பசுமரத்தாணி போல் என் மனத்திரையில்
பதிந்து கிடக்கின்றன என் தோழியே!

மணல் கோட்டைக்குள் அடுக்கடுக்காய்
மணல் வீடு கட்டி
மனதால் நானும் நீயும் மகிழ்ந்து
மறக்காத அந்த நாட்கள்
உனக்கு நினைவு இருக்கிறதா தோழியே!

துள்ளி எழுந்து விளையாடும் பள்ளி
பருவத்திலே அன்ன நடைபயின்ற
சின்ன மணிக் குயில் கூட்டங்களாய்
தெருவெங்கும் வலம் வந்தோம்
புரியாத புரிந்துணர்வுடன் அது
உனக்கு ஞாபகம் இருக்கிறதா தோழியே!

அன்னிய நாடுதான் சென்றாலும் என்னில்
ஜீவிக்கும் உன் ஞாபகங்கள்
நித்தமும் உன்னையே பூஜிக்கும்
புரிந்து கொள் நண்பியே!

அம்புலி காட்ட அடம் பிடித்த
உன் அடாவடித் தனத்திற்கு
சிறைபட்டு காத்திருக்கிறேன் நீ வருவாய் என........

சி.சிந்துயா, சி.சஜிதா
2018 கலை
காரைநகர் இந்துக்கல்லூரி

# காரைநகர் இந்துக் கல்லூரியின் 2015ம் ஆண்டு உயர்தர மாணவர் ஒன்றிய அறிக்கை

2015ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக கூட்டம் 2015.05.13 புதன் கிழமையன்று 1.00 மணியளவில் நடராஜா மண்டபத்தில் மன்றத்தலைவர் சு.டனோஜன் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. இந் நிகழ்வில் கல்லூரியின் அதிபர் திருமதி.வாசுகி தவபாலன் அவர்களும் மற்றும் பொறுப்பாசிரியர் திரு. இ.இராஜகோபால் அவர்களும் மற்றும் உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

2015ம் ஆண்டிற்கான நிர்வாக சபைத்தெரிவில் தலைவராக செல்வன் க.தர்சிகன் , செயலாளராக செல்வி ஆ.அபிராமி ,பொருளாளராக செல்வன் சு. உமாகாந்தன் ,பத்திராதிபராக செல்வி தே. ரோமிலா, உப தலைவராக செல்வி ச.லித்தியா உப செயலாளராக செல்வன் வி. குருபரன் ஆகியோர் சபையோர்களால் தெரிஉப செயலாளராக செல்வன் வி. குருபரன் ஆகியோர் சபையோர்களால் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் 2015ல் உத்தியோக பூர்வ சிந்தனையுடன் செயற்படுவதாக உறுதி அளித்தனர்.

## 2015ம் ஆண்டு உயர்தர மாணவர் ஒன்றிய செயற்பாடுகள்

### 1. உயர்தர மாணவர் ஒன்று கூடலும் விருந்து உபசாரமும்

2015ம் ஆண்டுக்கான ஒன்று கூடலும் விருந்து உபசார நிகழ்வும் நதி சஞ்சிகை வெளியீடும் 2015.06.27 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கல்லூரியின் நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் உயர் தர மாணவர் ஒன்றியத்தலைவர் க. தர்சிகன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பெருங்காப்பாளராக கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் அவர்களும், பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி மு. இந்திர மோகன் (வைத்திய அதிகாரி) அவர்களும் சிறப்பு விருந்தினராக தீவக் உதவிக் கல்வி பணிப்பாளராக திரு கி. செல்வராசா அவர்களும் கௌரவ விருந்தினராக கிராம உத்தியோகத்தர் இ.திருப்புகழூர்சிங்கம் அவர்களும் ஓய்வு நிலை அதிபர் மு.சு வேலாயுதபிள்ளை அவர்களும் ஓய்வு நிலை அதிபர் வே. குமாரவேலு அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்கள் மிகவும் மன மகிழ்வுடன் இந் நிகழ்வினை நடாத்தி முடித்தனர்.

### 2. ஆசிரியர் தின விழா 2015

யா/காரைநகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த ஆசிரியர் தின விழா 2015.10.06 நடராஜா மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் மற்றும் பகுதித்தலைவர் மற்றும் ஆசிரியர் அணைவரும் மாணவர்களினால் மலர் மாலை அணிவித்து மிகவும் சிறப்பாக கௌரவிக்கப்பட்டனர்.இந் நிகழ்வு பிரதம விருந்தினராக ப.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராக அ.சோமாஸ்கந்தன் மற்றும் சி.அருமைநாயகம் என்போர் கலந்துகொண்டனர். மற்றும் பாடசாலை ஆசிரியர் நிகழ்வு மாணவர் நிகழ்வு இடம்பெற்றது. ஆசிரியர்களுக்கு பரிசில்களும் கௌரவிப்பும் இடம்பெற்று 2.30 மணியளவில் முடிவடைந்தது

# பாடசாலைக் கீதம்

இராகம் - பிலஹரி | தாளம் - ஆதி

பல்லவி

தாய் மலரடி பணிவோம் நம் கல்லூரி
தமிழெனு மமுதினைப் பருகிட நிலை கொண்ட (தாய்)

அனுபல்லவி

உவமையிலாததோர் உமையவள் ஞானத்தை
உண்டருள் மதலையின் உயர் பெயர் தாங்கும் நம் (தாய்)

சரணம்

இராகம் - பூபாளம்

அன்றொரு நாட்பல வாண்டுகளின் முன்னர்
அன்புரு நெஞ்சினன் ஆய சயம்புவின்
சிந்தனையில் தவயோகப் பொருளுருவில்
வந்தனை நம்தமை வாழ்விக்க மகிழ்வொடு (தாய்)

இராகம் - அடானா

இன்னிசை யணிந்தனம் பொன்னிழம் செல்வியை
இன்தமிழ் சாயையின் ஏந்திழை அம்மையை
கற்பனைத் தேனினைக் காவிய ரசத்தினை
அற்புதத்தேவியை ஆவியைக் கருணையின் (தாய்)

இராகம் - சண்முகப்பிரியா

இயலிசை யாயின பலவித கலைகளும்
ஏந்திய வாணியை விஞ்ஞான சக்தியை
பேணிய பெருந்தவ பேற்றினை யூற்றினை
மானியால் தமிழ்பாவால் வாழ்த்துவம் வம்மிங்கள் (தாய்)




அச்சுப்பதிப்பு:
றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை.
021 225 5566